விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 10 சனிக்கிழமை (22.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 065

# அமெரிக்காவுடன் இணைந்து தீர்மானம் வரையும் பல நாடுகள்

## தகவல்கள் கசிவு !

(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான ஐ.நா. மனித உரிமைச் சபைத் தீர்மானத்தில் அனைத்துலக விசாரணைக்கான பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக வலுத்து வரும் நிலையில், அமெரிக்காவுடன் கூட்டாக நான்கு நாடுகள் இணைந்து இத்தீர்மானத்தினை வரையத் தொடங்கியுள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐககிய ராஜ்ஜியம், சியாரலியோன, மசிடோனியா மற்றும் மண்டினீகரோ ஆகிய நாடுகளே அமெரிக்காவுடன் கூட்டிணைவாக பங்கெடுத்துளளன.

இதேவேளை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கையை அடியொற்றியே இத்தீர்மானம் அமையும எனத் தெரிவித்துள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஒருவர், அது முழுமையாக அதனை அடியொற்றி இருக்காதெனவும் தெரிவித்துளளார்.

இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் வரும் மூன்றாவது தீர்மானத்துக்கு , 40 நாடுகள் இணை அனுசரணை வழங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. 2012-ம் ஆண்டு கொண்டு வந்த தீர்மானத்துக்கு 40 நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்த அதேவேளை, 2013-ம் ஆண்டில் 41 நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

வரும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு, ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் 25-வது கூட்டத் தொடரின் இறுதிநாளான மார்ச் 28-ம் திகதி நடத்தப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது. (எ-11)

## புகைத்தலுக்கு எதிராக...



புகை எமது வாழ்க்கைக்கு பகை என்னும் தொனிப்பொருளில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் பல்வேறு சுலோகங்களையும் தாங்கிய ஊர்வலம் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திற்கு முன்னால் உள்ள தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் இருந்து ஆரம்பமாகி சுன்னாகம் வரை இடம்பெற்றது.

விழிப்புணர்வு ஊர்வலத்தை யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். சுகாதார வைத்தியதிகாரிகளான அ.ஜெயக்குமாரன், எஸ்.நந்தகுமார், வட மாகாண சபையின் சுகாதார அமைச்சரின் பிரதிநிதியும் வட மாகாண சபை உறுப்பினருமான எஸ்.கஜதீபன, வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். (எ-6)

## மழை பெய்யலாம்

(கொழும்பு)

வடக்கு, வட-மத்தி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அடுத்த 24 மணித்தியாலங்களில் விட்டு விட்டு மழை பெய்யுமென்று எதிர் பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

மதியம் அல்லது மாலை வேளைகளில் வேறு பல இடங்களில் விட்டு விட்டு மழை அல்லது இடியுடன்கூடிய மழை பெய்யலாம். மேலும், இடியுடன கூடிய மழையின்போது சிறிது நேரம் பலத்த காற்று வீச லாம். அம்பாந்

19 ஆம் பக்கம் பார்க்க..

## குற்றவாளிகள் எவரையும் விடுவிக்கக் கூடாது !

### சென்னையில் உறவுகள் குமுறல்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளை விடுதலை செய்யக் கூடாது என்று குண்டுவெடிப்பில் அவருடன் பலியானவர்களின் குடும்பத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில், உச்சநீதிமன்றம் வழங்கி வரும் அடுத்தடுத்த தீர்ப்பு தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகரான அமெரிக்கை நாராயணன் சிறப்பு பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றிற்கு சென்னையில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த சந்திப்பில் 1991-ம் ஆண்டு ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ்காந்தியுடன் பலியான சம்தானி பேகம், எட்வர்டு ஜோசப், முனிசாமி உள்ளிட்டவர்களின் குடும்பத் தைச் சேர்ந்தவர்

19 ஆம் பக்கம் பார்க்க..

## இந்தியப் படையினர் குறித்தும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு?

(கொழும்பு)

இலங்கைப் போரின் போது காணாமல் போனோர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளின் போது இந்திய அமைதிப் படையினர் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைதததாக இலங்கை அறிவித்துள்ளது.

பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர இதனை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற விசாரணையின்போது இந்திய படையினருக்கு எதிரான முறைப்பாடுகள் கிடைத்ததாக அவர

19 ஆம் பக்கம் பார்க்க..

## ஷிராணியின் பதவி நீக்கம் தவறு என்ற தீர்ப்பு ரத்து



(கொழும்பு)

முன்னாள் தலைமை நீதியரசர ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கப்பட்ட நாடாளுமன்றத் தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என்று முன்னர் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பை உச்சநீதிமன்றம் நேற்று ரத்து செய்துள்ளது. குறித்த பதவிநீக்கத்தீர்மானம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், தலைமை நீதியரசரை பதவிநீக்குவதற்கான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

அதற்கான மனுவை முன்னாள் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இதன்போது, குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கைகளை ரத்து செய்வதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புகள் மூலம் நாட்

20 ஆம் பக்கம் பார்க்க..

## மன்னார் புதைகுழியிலிருந்து தடயப் பொருள் கண்டுபிடிப்பு

### நேற்றுடன் 77 எச்சங்கள் மீட்பு

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி 28ஆவது தடவையாக நேற்றுவெள்ளிக்கிழமைதோண்டப்பட்டபோது 02 மனித எலும்புக்கூடுகளுடன், 05 ரூபாய் நாணய வடிவலான தடயப் பொருளொன்றும கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அநுராதபுரம்சட்ட வைத்திய நிபுணர் டி.எல்வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் மேற்படி மனித புதைகுழியை தோண்டும் பணியை முன்னெடுத்தனர். இந்நிலையில், நேற்றைய தினத்துடனான மனித எலும்புக் கூடுகள் மற்றும் எச்சங்களின் மொத்த எண்ணிக்கை 77 ஆகும்.

இதேவேளை, ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட 09 எலும்புக்கூடுகளை நேற்றையதினம் மீட்டு பொதி செய்து மன்னார் நீதவானின் உத்தரவுக்கமைய மன்னார் பொது வைத்திய

19 ஆம் பக்கம் பார்க்க..

## ஜெயலலிதாவின் உருவப்பொம்மை எரிப்பு

(புதுடில்லி)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, சிறையில் அடைக்கபட்டுள்ள சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரொபர்ட்பயஸ் ஜெயக்குமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகிய 7 பேர் விடுவிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பை சட்டசபையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டார்.

மேலும், தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்றும் மத்திய அரசு 3 நாட்களுக்குள் தனது கருத்தினை தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால், மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி அவர்கள் விடுவிக் கப்படுவார்கள் என்

19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆறு பேரைக் கடித்த கிளிநொச்சிப் பூனை

கிளிநொச்சி கரைச்சி பொதுச் சந்தையில் ஆறு பொதுமக்களை பூனை கடித்துள்ளது என சந்தை வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சி பொதுச் சந்தையில் கடந்த ஒரு சில தினங்களில் மட்டும் சந்தையில் உலாவரும் பூனை ஒன்று பொருட்களை கொளவனவு செய்ய வருகின்ற பொது மக்களை திடீரென பாய்ந்து கடித்து காயத்தை ஏற்படுத்தி தப்பிச் சென்றுவிடுகின்றது. அந்த வகையில் கடந்த ஒரு சில தினங்களில் மட்டும் குறித்த பூனை ஆறு பொதுமக்களைக் கடித்துள்ளது.

இதில் சிலர் இரத்தம் சிந்துமளவுக்கு காயங்களுக்கு உள்ளாகி கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். குறித்த பூனையை பிடிப்பதற்கு வர்த்தகர்கள முயன்றபோது தப்பித்து சென்றுவிடுவதாகவும் சில மணிநேரங்களின் பின்னர் மீண்டும் சந்தைக்குள் உட்பிரவேசித்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் கட்டாக்காலி நாய்கள், பூனைகள் என்பன அதிகமாக காணப்படுவதாகவும் இவைகள் சந்தைக்கு வருகின்ற பொது மக்களுக்கு பல்வேறு வழியில்இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே மேலும் பொது மக்களை கடித்து ஆபத்தை ஏற்படுத்த முன்னர் குறித்த பூனை மற்றும் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# 500 ரூபா குறித்து அவதானம்

(கொழும்பு)

X/25 524376 என்ற இலக்கம் கொண்ட 500 ரூபா நாணயத்தாள்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விஷேட சுற்றிவளைப்பு தேடுதலின் போது 2 இலட்சத்து 65 ஆயிரம் பெறுமதியான 500 ரூபா போலி நாணயத் தாள்கள் 530 ஐ வைத்திருந்த ஒருவரை பியகம பிரதேசத்தில் வைத்து கைது செய்தததாக பொலிஸார் அறிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொண்டவிசாரணைகளின போது 500 ரூபா போலி நாணயத் தாள்கள் 1800 அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பெறுமதி 9 இலட்சம் ரூபா என்றும் தெரியவந்துள்ளது.

அவ்வாறான நாணயத்தாள்கள் புழக்கத்தில விடப்பட்டமையால் மக்கள் அவதானமாக இருக்குமாறும் தங்களுடைய கைகளுக்கு வரும் 500 ரூபா தாள்கள் போலியானதாக இருப்பின் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறும பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ-11)

# மின்னல் தாக்கம் ஒருவர் பலி

இரத்தினபுரி, பெல்மதுளையில் மின்னல் தாக்கத்தினால் ஒருவர் பலியானதுடன் ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பெல்மதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் காஹவத்தை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இரத்தினக் கல் குழியில் இருந்தவர்களே இந்த அனர்த்தத்திற்கு முகம்கொடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# மீள்குடியமர்வை வலியுறுத்தி தம்பிராசா சத்தியாக்கிரகம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மற்றும் சம்பூர் கிராம மக்களுடைய நிலங்களிலிருந்து படையினர் வெளியேறி பொதுமக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டுமென வலியுறுத்தி, யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரகப் போராட்டமொன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பிரதிநிதியுமான மு.தம்பிராசா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்திற்கு கூட்டமைப்பு உள்ளிட்ட இதர கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளதாகவும் தம்பிராசா தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து முகாம்களில் வாடுகின்ற திருகோணமலையின் சம்பூர் மற்றும் யாழ்ப்பாணத்தின் வலி. வடக்கு மக்களை மீளக்குடியமர்த்தவும், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-11)


உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?

மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்
021 222 8117

கைகொடுக்கும் நண்பர்கள்
(இரகசியம் பேணப்படும்)

(சி-6522)



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 - 08 - 1944

மறைவு 19 - 02 - 2014

## அமரர் கணபதிப்பிள்ளை ஜெகநாதன்

கிளி/கிளிநொச்சி ம.வி முன்னாள் ஆசிரியை திருமதி **வனஜா – செல்வானந்தம்** அவர்களின் பாசமிகு தந்தை கடந்த 2014.02.19 ஆம் திகதி அன்று காலமான செய்திகேட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
கிளி/கிளிநொச்சி ம.வி,
கிளிநொச்சி.

(சி-6560)



# மரண அறிவித்தல்



## திருமதி நாகமணி சிந்தாமணி

மானிப்பாய் உடுவிலைப் பிறப்பிடமாகவும் மணல்தறை ஒழுங்கை கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமணி சிந்தாமணி அவர்கள் 19.02. 2014 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணியின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற கதிரேசு நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சரஸ்வதி (மலர்), சரோஜினி (எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்), சண்முகானந்தம் (விக்கி-கனடா), வசந்தகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கணநாதன் (குணம்), ஜெயபாலசிங்கம் (இயக்குநர்- எவர்சைன் கிட்ஸ் வேர்ல்ட்), தயாநிதி (கனடா), கிருபா (பிரான்ஸ்), உதயகுமார் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கலாநிதி மைதிலி (சிரேஷ்ட உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), வைதேகி (பிரான்ஸ்), ஜானகி (அவுஸ்திரேலியா), சிந்துஜா (STEPS Institute), மாருதி, திறோஜன் (பொறியியல் பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜனுஷன், கௌசல்யா (கனடா), தனுசிகன் (கனடா), நித்தியவாணி (பிரான்ஸ்), அபிராமி (பிரான்ஸ்), வைஷ்ணவி, பேராசிரியர் விசாகரூபன், தேவதாசன், சிவானந்தன், அஜந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரிஷ்மா, தேஜா, சண்முகன், வேணுஜன், தரணியா, சாயகி, சாருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 23.02.2014 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.393/23, கோவில் வீதி,
நல்லூர்.
தொலைபேசி - 0212219133

தகவல்:
திரு.நா.சண்முகானந்தம்
(விக்கி-கனடா)

(5667)



# 16ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



அமரர் சிவஸ்ரீ

## சதாசிவக்குருக்கள் நித்தியானந்தக்குருக்கள்

08.02.2014 அன்று இறைசிவபதமடைந்த எமது அன்புக்குரியவரும் யாழ்ப்பாணம் ஜெய நீராவியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குருவாக விளங்கிய அமரர் சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் நித்தியானந்தக்குருக்கள் ஐயா அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானையும், வெங்கடேசப் பெருமாளையும், கொழும்பு கதிரேசன் வீதி ஸ்ரீ தேவி கருமாரி அம்பாளையும் மனமுருகிப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இல்லத்தில் பாஷாண உத்வாசனம் விஜய வருடம் மாசி மாதம் 11ம் நாள் (23.02. 2014) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறும். மறுதினம் 24.02. 2014 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சபிண்டீகரணமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



24/1 சாத்திரியார் லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
0773845671
0774278568

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மைத்துனர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சிவஸ்ரீ.வி.பிரணவன் ஐயா. (யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்)

[சி-6559]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கண்டுபிடிப்புக்கள்

சின்னஞ் சிறு பிள்ளைகளைப் பார்த்து "சும்மா இரு, சும்மா இரு" என்று அவர்களை அடக்கி ஒடுக்கி வைக்கிறோம். அவர்கள் அமை தியாக இருந்தால் பிற்காலத்தில் பெரிய பெரிய வளர்ச்சி அடைய மாட் டார்கள். அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும். தப்பித் தவறி எதை யாவது செய்தால்கூட அவர்கள் என்ன செய்கிறீர்கள் என்று நாம் கவனிக்க வேண்டும். அதை நாம் அங்கீகரிக்க வேண்டும். இதை நோண்டுகிறான், அதை கிழிக்கிறான், இதை வளைக்கிறான், அதைப் பிடித்து இழுக்கிறான் என்றெல்லாம் குறை சொல்லிக் கொண்டி ருப்பதை விட எந்தச் செயலில் அவனுக்கு ஈடுபாடு இருக்கிறது என்பதை கண் டறிய வேண்டும். அப்படிக் கண்டறிந்து அவனை ஊக்கப்படுத்தினால் நிச்சயமாக அவன் பிற்காலத்தில் ஒரு பெரிய ஆராய்ச்சியாளனாக வருவதற்கும் நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

கொல்லுப்பட்டறையில் இருந்து வந்த ஒரு சின்னப்பையன் ஒரு சிறிய கம்பியை எடுத்து அப்படி இப்படி வளைத்திருக்கின்றான். அவனுடைய அப்பா அதை ஒரு சிறு சாதனமாக ஆக்கினார். அதுதான் ஊக்கு.

அதே போலத்தான் பேப்பர் கிளிப், ஜெம்கிளிப் என்று சொல்கிறோம் அல்லவா? அவை எல்லாம் அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டவைதான். வேலையில்லாத ஓர் இளைஞன் ஒரு பாலத்தின் மேலே உட்கார்ந்திருக் கிறார். அப்போது அவர் கையில் ஒரு சின்ன கம்பி இருந்திருக்கிறது. அதை கைபோன போக்கில் மனது போன போக்கில் இப்படி வளைக் கிறார். அப்படி வளைக்கிறார் அவர்.

சிறிது நேரம் சென்று பார்த்தால் அவருக்கே ஆச்சரியம். ஒரு விசித்திரமான வடிவத்தில் அந்தக் கம்பி இப்போது வளைந்திருந்தது. அதை உடனே தனது சட்டையில் அணிந்து கொண்டார். அப்படி அதை அணிந்து கொண்டு வீதியில் சென்ற போது வழியிலே அவரை எல் லோரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். ஏனென்றால் கட்டன் மாதிரி ஒரு அலங்காரப் பொருள் இவரது சட்டையில் இருக்கிறதோ என்றுஇ உடனே அவருக்கு ஒரு யோசனை வந்தது. நிறைய செம்புக் கம்பிகளை எடுத்துக் கொண்டு வந்து அவற்றை யெல்லாம் கிளிப் மாதிரி செய்து தள்ளியிருக்கிறார்.

எல்லோரும் மிகவும் கவர்ச்சிகரமாக இருந்த அதை போட்டி போட்டுக் கொண்டு வாங்க ஆரம்பித்து விட்டார்கள். அதிகமாக பணம் அவருக்கு சேர்ந்து விட்டது. ஆடைப்பகுதிகளை ஒன்றோடொன்று இணைப்ப தற்காக இந்த கிளிப் பயன்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் இரண்டு வளைவுகளில் இருந்த கிளிப்புகள் தான் 1900 இல் இப்போது இருக்கிற வடிவத்தை அடைந்ததாம். செம்பு, பித்தளை கம்பிகளால் உருவாக்கப்பட்ட கிளிப்புகள் எல்லாம் இப்போது ஸ்டெயின்ஸ் ஸ்டீல் என்று சொல்கிறோமே அதை வைத்து செய்வதாக மாறியிருக்கிறது.

இப்போது ஜெம்கிளிப்புகளை நாம் சர்வசாதாரணமாகக பயன்படுத் துகிறோம். அலுவலகத்தில் மட்டுமல்ல வீடுகளிலும் அதை உபயோக ப்படுத்துகிறோம். அந்த அளவுக்கு வாழ்க்கையோடு அது இணைந்து விட்டது. யாரோ ஒருத்தருடைய தற்செயலான விளையாட்டில் இருந்து கிடைத்த ஒரு சாதனம் இல்லையா அது. அதனால் நம் பிள்ளைகளில் எத்தனை பேர் சாதனைகளைப் படைக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்களோ! அதனால் அவர்களை சற்று விளையாடத்தான் விடுவோமே.

விஞ்ஞானத்தில் எதேச்சையாக இப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட கண்டு பிடிப்புக்கள் நிறைய உண்டு. அதே நேரத்தில் இவற்றையெல்லாம் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிற மாதிரியான வேடிக்கையான நிகழ்ச்சிகளும் நிறைய உண்டு. அவற்றில் ஒன்றை இப்போது நாம் பார்க்கப் போகிறோம்.

தோமஸ் அல்வா எடிசன் ரயில் பெட்டிகளிலே தன்னுடைய ஆராய்ச்சி நிலையத்தை வைத்திருந்தார். அந்த ஆராய்ச்சி நிலை யத்தில் ஒருநாள் தீப் பிடித்துவிட்டது. அதனால் ரயில் பெட்டியும் எரிந்து போனது. அந்தப் பகுதிக்கு வந்த ஒரு ரயில்வே அதிகாரி இதைக் கண்டு கோபமடைந்து தோமஸ் அல்வா எடிசனின் கன்ன த்தில் ஓங்கி அறைந்து விட்டார். அதன் விளைவாக எடிசனின் ஒரு பக்கத்து காது கேட்காமல் போய் விட்டது. இப்போது யாரும் அவரிடம் பேச வேண்டும் என்றால் மெது வாகப் பேசினால் அது அவர் காதுக்குக் கேட்காது. கத்திக் கத்திதான் பேச வேண்டும். அப்போது தான் ஓர் நபர் சொன்னாராம்.

"நீங்கதான் பெரிய விஞ்ஞானியாச்சே, காது கேட்பதற்காக ஒரு கருவியைக் கண்டுபிடி க்கக் கூடாதா?" என்று அதற்குத் தன் பதிலாக எடிசன் ஒரு பெரிய தத்துவத்தைச் சொன்னார். "இதற்காக கருவி கண்டுபிடிக்க வேண்டாம். நான் இப்படியே இருக்கிறதுதான் நல்லது என்று நினைக்கிறேன். ஏனைய நம் காதில் விழுகிற ஒலிகளில்பல ஒலிகள் தேவை இல்லாதவையாகத்தான் இருக்கின்றன.

பல பேரின் பேச்சுக்கள் அர்த்தம் இல்லாதவையாகத்தான் உள்ளன. அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு இருப்பதை விட கேட்காமல் இருப்பது மிகவும் நல்லது.

அதோடு இன்னொரு முக்கியமான பயன் என்னவென்றால் யாரா வது என் பக்கத்தில் வந்து பேச வேண்டும் என்றால் சத்தம் போட்டுத்தான் பேச வேண்டும். அப்படிச் சத்தம் போட்டு பேசுவதால் அவர்கள் யாரும் பொய் சொல்ல முடியாது.

ஏனென்றால் பொய் சொன்னால் அக்கம் பக்கத்தில் இருக்கிற வர்களுக்குதெரிந்துவிடுமே. இப்படிப் பல நன்மைகள் இருக்கின்றன என்று எடிசன் விளக்கமளித்தாராம்.

*இளசை சுந்தரம்*

# ஐ.நா.விடம் இலங்கைத் தமிழர் குறித்து இந்தியா தனித் தீர்மானம்

### மன்மோகனை சந்தித்து வலியுறுத்தியது தி.மு.க

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்காக ஐ.நா மனிதவுரிமை ஆணையத்திடம் இந்தியா தனி தீர்மானம் அளித்திட வேண்டும் என தி.மு.க. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக நேற்று (வெள்ளிக்கிழமை) டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க நாடாளுமன்ற குழு உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தனர்.

இதன்போது, இலங்கையில் கடந்த 2008 முதல் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற போரின் போது போர் குற்றம் இடம்பெற்றமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் தலைமையிலான தன்னிச்சை யான மற்றும் சர்வதேச விசாரணை நடத்த ஆதரவு அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுளனர்.

மேலும், 2008 டிசம்பர் மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரை இலங்கை இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட போர் குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நாவின் கீழ் இயங்கும் தன்னிச்சையான மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த சர்வதேச விசாரணை அமைப்பை உருவாக்க வேண்டும்.

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் குறிப்பாக அரசுக்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக தொடர்ந்து கண்காணிக்க ஐக்கிய நாடுகள் சபை நடைமுறை ஒன்றை அமைக்க வேண்டும் என்ற 2 பரிந்துரைகளை முன்வைத்தனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இந்தியா முன் நின்று தனி தீர்மானம் ஒன்றை கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்துவதாக தி.மு.க. எம்.பி.க்கள் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

# யாரையும் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் இணைக்கவில்லை

### கிளிநொச்சி பிராந்திய இராணுவ தளபதி

யாரையும் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் இணை க்கவில்லை என கிளிநொச்சி பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுசந்தர ரணசிங்க தெரிவித்துள்ளார். கிளிநொச்சி இராணுவ ஒத்துழைப்பு மையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது,

கிளிநொச்சி மாயவனூர் கிராமத்தில் கட்டாயப்படுத்தி யுவதிகளை இராணுவத்தில் சேருமாறு கூறப்பட்டது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

இராணுவத்தில் தமிழ் யுவதிகளை இணைத்து கொள்வது தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் தொடர்பிலும் கூறப்பட்டுள்ளது.

மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட சம்பளத்தினை பெறுவதற்கு நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம். அத்துடன் இராணுவத்தில் இணைவதற்கு பல பகுதிகளிலும் யுவதிகள் ஆர்வமாக உள்ளனர். எனினும் இப்பகுதி யுவதிகளுக்கு இச் சந்தர்ப்பததை வழங்க வேண்டும் என்ற நோக்குடனேயே தமிழ் யுவதிகளை இராணுவத்தில் சேர்க்கின்றோம்.

இந் நிலையில் நாம் யாரையும் வற்புறுத்தியோ வலு க்கட்டாயமாகவோ இராணுவத்தில் இணைக்கவில்லை. அவ்வாறு எவரும் செயற்பட்டால் இது இராணுவ வீரராக இருந்தாலும் வெளிப்படை த்தன்மையுடன் பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்யுங்கள். நான் அந்த இடத்திற்கு உடன் வருவேன். அவ் வாறான நிலை இதுவரை ஏற்படவில்லை என்றார்.

(அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 100 |
| தக்காளி | 20 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 35 | 40 |
| கோவா | 20 | 40 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 20 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-80 | 70 | 60 |
| பாகற்காய் | 60 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 60 |
| பயற்றங்காய் | 70 | 150 | 80 |
| லீக்ஸ் | 60 | 90 | 80 |
| பீற்றூட் | 30 | 70 | 40 |
| கறிமிளகாய் | 60 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 180 | — |
| போஞ்சி | 40 | 80 | 60 |
| கத்தரிதம்புள்ள | 10 | 50 | — |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 70 | 70 | 100 |

# இராசி பலன்

*22.02.2014*
*(மாசி 10, சனிக்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.26 மணிக்கு*
*சப்தமி காலை 7.40 மணிவரை*
*அட்டமி பின்னிரவு 6.05 மணிவரை*
*விசாகம் காலை 7.44 மணிவரை*
*இராகுகாலம் 9.31-11.01 மணிவரை*
*சுப நேரம் 3.31-3-01 மணிவரை*
*அட்டமி-நவமி*

**மேடம்** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்து செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்** வாய்த்த நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், கூட்டுத் தொழிலில் எதிர் பார்த்த நன்மைகளுண்டு, ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும்.

**கடகம்** பெற்றோர் மீதான அக்கறை கூடும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.

**சிங்கம்** வெளியூர் தொடர்புகள் சிறப்பாக இருக்கும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**கன்னி** குடும்ப ஒற்றுமை மேலோங்கும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்காக்க வல்லாளர்களின் உதவியை நாடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்** நிலையான வருமானத்திற்கு வழி அமைத்துக் கொள்வீர்கள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும், ஆழ்ந்த சிந்தையுண்டு, சயன சுகமுண்டு.

**தனுசு** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், குடும்பத்தினர் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர், பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம், பிதா சிந்தையுண்டு.

**மகரம்** நண்பர்கள் சந்திப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பற்றி எரிந்தது வர்த்தக நிலையம் பொருட்கள் எரிந்து நாசமாகின

(மானிப்பாய்)

சுதுமலைப் பகுதியிலுள்ள கடையொன்றில் திடீரென ஏற்பட்ட தீயினால் சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் நாசமாகியுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வியாழக் கிழமை நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சம்பவ தினம் கடையின் உரிமையாளர் இரவு 9 மணியளவில் கடையினை பூட்டி விட்டு வீடு சென்றுள்ளார்.

இந்நிலையில் நள்ளிரவு 12 மணியளவில் வெடிப்புச் சத்தம் கேட்டதையடுத்து தீயும் அக் கடையிலிருந்து வெளிப்பட்டதையடுத்து அயலவர்கள் குறித்த கடை உரிமையாளருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பின்னர் கடை உரிமையாளரும் அயலவர்களும் சேர்ந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

கடையின் முன் கதவுப் பகுதியிலிருந்து தீ எழுந்தமையால் கடையின் கதவின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

அத்தோடு சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள், பிஸ்கட்டுக்கள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் என்பன தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லையென மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் முறைப்பாட்டில் தனிப்பட்ட பகை எதுவுமில்லையென கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை ஸ்தலத்திற்கு வந்த மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-23)



புகையிலை நிறுவனங்கள்

நன்றி:-மிரர்

# உயிரைப் பறிக்கும் நிலையில் கிணறு; நடவடிக்கை எடுக்க கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடையிலிருந்து மாகியப்பிட்டி செல்லும் பிரதான வீதியின் ஓரமாக யா/ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு சமீபமாக உள்ள பகுதியில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ள கிணறு தொடர்பில் அப்பகுதி மக்களால் அச்சம் வெளியிடப் பட்டுள்ளது.

வீதியின் ஓரமாக பாதுகாப்பு அரண்கள் எதுவுமின்றி காணப்படும் குறித்த வயற் கிணறு தற்போது பாவனைக்குட்படுத்தப் படாத நிலையில் வீதியால் பயணிப்போரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இதேவேளை குறித்த கிணற்றுக்கு எதிர்ப் பக்கமாக பாரிய குளம் அமைந்திருப்பதால் வீதியின் அகலம் குறைந்துள்ளதோடு பற்றைகளால் சூழப்பட்டு இலகுவில் அவதானிக்க முடியாதுள்ள இக் கிணறு வீண்விபரீதங்களை ஏற்படுத்தக்கூடுமென அஞ்சப்படுகின் றது.

சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அதிகளவானோர் பயன்படுத்தும் குறித்த பிரதான வீதியில் ஆபத்தான வகையில் வயற் கிணறு அமைந்திருப்பது பொருத்தமற்றது என பொதுமக்கள் உணர்ந்துள்ள நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் உட்பட உரிய அதிகாரிகளுக்கு மாத்திரம் இந் நிலைமை விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளதா? என பிரதேச மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

அத்துடன் வீதியில் மின்விளக்குகள் போதிய அளவில் பொருத்தப்படாத நிலையில் உள்ள இவ் வீதி மாலையானதும் இருளில் மூழ்கி விடுவதால் மேலும் ஆபத்து அதிகரிக்கும் பீதி நிலை தோன்றியுள்ளதாக கூறும் இம் மக்கள் குறித்த பகுதியூடாக சிறுவர்கள், மாணவர்களை அனுப்பி வைக்கும் போது பெற்றோர்கள் அச்ச உணர்வுடனே அனுப்பி வைப்பதாக குறிப்பிடுகின்றனர்.


எனவே, இப் பிரதேச மக்களின் இன்னல் நிலைகளையும் பாதுகாப்பினையும் கருத்திற் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், பிரதேச அதிகார சபையினர் உட்பட உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்வதோடு இவ்விடயத்தில் விரைந்து செயற்படுமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

குருசடித்தீவு

## புனித அந்தோனியார் ஆலயத்திறப்பு விழா

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் அமைந்துள்ள குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலய கட்டடத் திறப்பு விழா இன்று சனிக் கிழமை காலை 7மணிக்கு யாழ் .மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் திறந்து வைக்கப்படும். அன்றையதினம் அவ்வாலயத்தில் ஆயரினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ்வாலயம் 1947 ஆம் ஆண்டு கட்டப்பட்டு திருப்பலி நடைபெற்று வந்தது. இந் நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆலயம் சேதமடைந்தது. தற்போது ஆலயம் புனரமைக்கப்பட்டு கட்டடத்திறப்பு விழா நடைபெறவுள்ளது. (அ-2)




# மின்விநியோகம் தடைப்படும்

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்விநியோகம் தடைப்படுமென யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மருதங்கேணி, சோரன்பற்று, மாசார், புதுக்காடுச் சந்தி, கரம்பொன், பொன்னொச்சிக் கடை, சந்தியிலிருந்து நாரந்தனை வரையான பிரதேசம், நெடுந்தீவுப் பிரதேசம் முழுவதும் மின்விநியோகம் தடைப்படுமென அவர் குறிப் பிட்டுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், கந்தர்மடம், ஆரிய குளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வெண்ட் பிரதேசம், பிரதான வீதி, யாழ். நகரம் முழுவதும், யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, கலட்டி, தட்டார்தெரு, மனோகரா, கஸ்தூரியார் வீதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ். பிரதான வீதி, பண்ணைப் பகுதி, ஊரெழு, உரும்பிராய் ஒரு பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, போயிட்டி, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், தூண்டி, வசந்தபுரம், ஆனந்தன் வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியில் ஒரு பகுதி கொக்குவில் சந்தி, கம்பஸ்லேன், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், முடமாவடி, பாற்பண்ணை, சிவப்பிரகாசம் வீதி, பூநாறி மரத்தடி, நாச்சிமார்கோவில், இராச வீதி, கல்வியியற் கல்லூரி, 51பிறிகேட் இராணுவ தலைமையகம், கோப்பாய் கிருஸ்ணன் கோவில், பொற்பதி வீதி, கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் மேற்கு, பலாலி வீதி, நெடுந் தீவுப்பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# நித்தியவெட்டை பிரதான வீதி புனரமைக்கப்படுகிறது

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் நீண்ட காலமாக திருத்தப்படாதிருந்த கட்டைக்காடு நித்திய வெட்டை பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படுகிறது.


மேற்படி மக்களின் வேண்டுகோளையடுத்து 30 வருடங்களுக்கு மேலாகதிருத்தப்படாதிருந்த சுமார் 5 கிலோமீற்றர் நீளமான வீதியில் 1 1/2 கிலோமீற்றர் நீளமான வீதியே தற்போது புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளரினதும், அதன் உப அலுவலகமாகிய மருதங்கேணி பிரதேச சபையின் பொறுப்பதிகாரியின் துரித நடவடிக்கையினூடாக சுமார் 24 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியை உலக வங்கி வழங்கியுள்ள நிலையில் புறநெகும வேலைத்திட்டத்தின்கீழ் பிரதேச சபையினர் வீதி வேலைகளை முன்னெடுக்கவுள்ளனர். அத்தோடு குறித்த வீதியிலுள்ள இரண்டு பாலங்களும் புனரமைக்கப் படவுள்ளன.

இதற்கான வேலைத்திட்டங்கள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நடைபெற்று வரும் நிலையில் ஜூன் மாதமளவில் வேலைகள் முடிவடையவுள்ளன என பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-9-64)

# இனந்தெரியாத விசமிகளால் வாழை மரங்கள் அழிப்பு



(சுன்னாகம்)

சுமார் 45 வாழை மரங்களை இனம் தெரியாத விசமிகள் வெட்டி வீழ்த்தியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 19 ஆம் திகதி நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. சுன்னாகம் ஐயனார் கோவிலடி வர்த்தகர் ஒருவரின் தோட்டத்தில் உள்ள வாழை மரங்களே இவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன.

சம்பவதினம் நள்ளிரவு மின்சாரம் தடைப்பட்டதை பயன்படுத்தி வாள் கொண்டு இவ்வாழை மரங்களை வெட்டி வீழ்த்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகரின் மீதான பகை காரணமாக இவ்வாழைகள் வெட்டப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (அ)

# பேடன் பவல் தினம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மாவட்ட இலங்கை சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் பேடன் பவல்தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பருத்தித்துறை யா/வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் எஸ்.திரவியராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் ச.சற்குணராசா, யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ச.வேலழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வலியுறுத்தலை இலங்கை கருத்தில் எடுக்காது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

சீனாவின் அதிகாரம் இலங்கையில் செலுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தியாவின் வலியுறுத்தல்களை இலங்கை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாதென தெரிவித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரனுக்கு எதிராக கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தமிழின அழிப்புக்கு பன்னாட்டு விசாரணை மற்றும் பொதுசன வாக்கெடுப்பு தொடர்பில் இந்திய அரசையும், இந்தியக் கட்சிகளையும் கோரும் தீர்மானமொன்றை தனது அரசவையில் நிறைவேற்றியிருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இது தொடர்பில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை சென்னையில் நடத்தியிருந்தது.

சிங்கள தேசம் வரலாற்று ரீதியாக இந்திய எதிர்ப்பை தன்னகத்தே கொண்டது என்பதும் சிங்கள தேசத்தின் தற்போதைய சீன உறவுக்கு பின்னால் இந்திய எதிர்ப்பு இருக்கின்றது என்பதும் இரகசியமல்ல என வி. உருத்திரகுமாரன் அப்பத்திரிகையாளர் சந்திப்பில் சுட்டிக்காட்டினார். இந்நிலையிலேயே சிங்கள பௌத்த பேரினவாத அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளது.

புலம்பெயர்ந்த அமைப்புகள் எந்தவித கோரிக்கைகளை விடுத்தாலும், இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு தற்போது இந்தியா இல்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான உறவின் நெருக்கம் காரணமாக இந்த விடயம் உறுதியாகியுள்ளதாக தெரிவித்துள்ள இவ்வியக்கம், எதனையும் இலங்கையில் நிறைவேற்றக்கூடிய அதிகாரம் இந்தியாவிற்கு கிடையாதெனவும் இந்தியாவின் பலம் தற்போது இழக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளது.

உலக ஒழுங்கலில் தென்னாசியப் பிராந்தியத்தை பொறுத்தவரை, இந்தியாவின் முதன்மை பாத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு இலங்கை அரசு என்னதான் முயற்சிகளை எடுத்தாலும், இந்திய அரசின் முடிவுகளை மீறி இலங்கைத்தீவு இயங்க முடியாது என்ற அரசியல் யதார்த்தம் உள்ளதென பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா 2014 ஏப்ரல் 5 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழகம் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாக இச்சங்கச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். இந்நிகழ்வில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நாட்டிய நாடகம், சுழலும் சொற்போர் இயல் நிகழ்வும் சிறப்புச் சொற்பொழிவும் பேராசிரியர் தி.சிவலிங்கராஜாவின் தலைமையில் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் மாதம் பாடசாலை மாணவர்களும் மற்றும் ஆர்வலர்களுக்குமான கவிதைப் பயிற்சிப்பட்டறை யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மக்களவையில் காங்கிரஸ்; அ.தி.மு.கவினர் வாய்த்தர்க்கம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மூவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனை இரத்து செய்யப்பட்டதையடுத்து தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட இக்கொலை வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரையும் விடுதலை செய்ய அமைச்சரவை முடிபு செய்திருப்பதாக அறிவித்தார்.

இந்நிலையில் இதுகுறித்த விவாதம் நேற்று முன்தினம் மக்களவையில் நடைபெற்றது. அப்போது தமிழக அரசின் முடிபுக்கு எதிர்ப்பு தெரிவித்து பேசிய காங்கிரசைச் சேர்ந்த சஞ்சய் நிரூபம் நாங்கள் உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக் கொள்ளமாட்டோம். ஆனால் ஜெயலலிதா அரசியல் ஆதாயத்திற்காக அக் குற்றவாளிகளை விடுதலை செய்ய விரும்புகிறார்.

தமிழக அரசு நீதித்துறையில் சிறப்பாக செயலாற்றவில்லை என்று தெரிவித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் நாற்காலியில் ஏறி நின்று கோஷங்களை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவையிலிருந்தார். இதனையடுத்து துணை சபாநாயகர் பிரான்சிஸ்கோ சர்தின்கா அவையை ஒத்திவைத்தார். மீண்டும் அவை தொடங்கியபோதும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். (அ-2)

# இலங். தமிழர்களை நாடு கடத்துங்கள்

## காங்கிரஸ் வலியுறுத்து

இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கைத் தமிழர்களையும் நாடு கடத்துமாறு காங்கிரஸ் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான வீ.வைத்தியலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ராஜீவ் காந்தியின் கொலை குற்றவாளிகளை விடுதலை செய்ய தமிழக அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மத்திய அரசாங்கத்தின் ஆலோசனை இன்றி தன்னிச்சையாக தமிழக அரசாங்கம் இவ்வாறு தீர்மானிக்க முடியாது.

இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கைத் தமிழர்களையும் உடனடியாக நாடுகடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# சிகரெட் பக்கெட்டுக்களில் புகைப்பட எச்சரிக்கை சட்டம்

## சுமந்திரன் எம்.பி.வரவேற்பு

(கொழும்பு)

சிகரெட் பக்கெட்டுக்களில் புகைப்பட எச்சரிக்கை குறித்த சட்டம் வரவேற்கப்பட வேண்டியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சிகரெட் பக்கெட்டுக்களில் புகைப்பட எச்சரிக்கை பிரசுரிப்பது மிகவும் சிறந்த தீர்மானம். இதனை நாம் வரவேற்கின்றோம்.

குறித்த பக்கெட்டுக்களில் புகைப்பட எச்சரிக்கை பிரசுரிப்பது தொடர்பில் எழுந்த எதிர்ப்புக்கள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் இந்த விடயத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தது.

கட்சி பேதங்கள் இன்றி அனைத்து தரப்பினரும் இந்த சட்டத்தை அமுல்படுத்த ஆதரவளிக்க வேண்டும்.

இந்த சட்டத்தை அமுல்படுத்தும் யோசனையை முன்வைத்த கார்லோ பொன்சேகாவிற்கு எமது நன்றிகள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 34 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்

(கொழும்பு)

ஒஸ்திரிய நாட்டுப்பெண்மணியான ராணிபயரின் நிதி பங்களிப்பில் கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஊடாக வறுமைப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 34 பேருக்கு நேற்று துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி இராணுவ ஒத்துழைப்பு மையத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க, ஒஸ்திரிய நாட்டு பெண்மணி ராணி பியர் மற்றும் கிளிநொச்சி பிராந்திய இராணுவ தளபதிகள், பிரிகேடியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

T.P.:- 0212223378
Fax:-0212227829
Email: valampurii@yahoo.com

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 41 செவ் 12 ல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: A/L, NCT (Civil) / Assistant Branch Supervisor<br>தொ.இ: B/2833 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: 26 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி<br>தொ.இ: G/2839 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 19 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BDc / ஆசிரியர்<br>தொ.இ: B/2836 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 15 செவ் 8 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/2842 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 53 செவ் 4 ல்<br>உயரம்: 167 cm<br>தகைமை/தொழில்: Engineering, CIMA (Middle level) / பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/2837 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 54.75 செவ் 1 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: B.Com / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/2844 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 74 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, NCE / அரச தொழில்<br>தொ.இ: B/2838 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 15.25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: ACCA / Account Assistant<br>தொ.இ: G/2852 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரபலத்தின் உதவியுடன் நில அபகரிப்பு தொடர்கின்றது

## அமெரிக்க அதிகாரியிடம் ரவிகரன் முறையீடு


அமெரிக்கா அர சியல் அதிகாரி மைக்கேல் யு.எர்வினுடன் முல்லைத் தீவில் இடம்பெற்ற சந்திப்பில இலங்கைக்கு கொடுக்கப்படும் கால அவகாசம் தமிழர் வாழ்பகுதகளின் இனப்பரம்பல் கோலத்தை மாற்றவே பயன்படுகிறது என வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

அமெரிக்க அரசியல்அதிகாரிமைக் கேல் யு.எர்வினுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பில் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடிய போது தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் பல்வேறு ஆவண ஆதாரங்களுடன் கருத்துக்களை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகார பலத்தின் உதவியுடன் ஆயுத பலத்தின் முன்னிலையில் தமிழர்களின் பூர்வீக பிரதேசங்களில் நடைபெறும் இந்த நில அபகரிப்புகள் எல்லையற்று தொடர்வது குறித்து தமிழ் மக்கள் எண்ணிலடங்கா முறைப்பாடுகளை தந்த வண்ணம் உள்ளனர்.



தங்களுக்கு தெரிவிக்கும் இந்த புள்ளிவிபரங்களை தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், தோட்டக்காணிகள் என அபகரித்துள்ளனர்.

மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேசங்களிலும் அபகரிப்புக்க்கள் இடம்பெற்றுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் 58.96 வீதமாக இருந்த தமிழர்கள் 2012 இன்படி 39.79 வீதமாக குறைந்துள்ளது. அதேநேரம் 4.66 வீதமாக இருந்த சிங்கள மக்கள் 2012 இன்படி 23.15 வ்தமாக உயர்ந்துள்ளது.

இந்த வீதத்தில் பெரும்பகுதி எமது பகுதிகளில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலமாக அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது.

இப்போது இந்த நடவடிக்கைகள் வடக்கில் முல்லைத்தீவிலும் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என தொடர்கின்றது.

இந்நிலையில் எங்களுக்கு, எங்களுடைய மக்களுக்கு பதில் சொல்ல வேண்டியவர்களாகவே இன்று உங்களை நாம் பார்க்கின்றோம். எங்களுடைய மக்களுக்கு விடிவு கிடைக்க உங்களின் முயற்சி இன்று அவசியமாகின்றது.

2012/2013 இல் நீங்கள் இரண்டு தடவைகள் பிரேரணைகளை கொண்டு வந்துள்ளீர்கள். இக்காலத் தினுள் தான் குடியேற்றங்கள் நடைபெறுகிறது. கால அவகாசம் வழங்கப்பட இந்த நிலைகள் இன்னும் மோசமாகிறது.

2009 தொடக்கம் 2014 வரை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட நல்லிணக்க அவகாசம் தமிழர்களின் இனப் பரம்பல் கோலத்தை மாற்றியமைக்கவே பயனபட்டு இருக்கிறது.

இனியும் கால அவகாசம் வழங்குவது இந்த நிலையை இன்னும் தீவிரமாக்குவதாகவே அமையும். ஆதலால் இம்முறை கொண்டு வரும் தீர்மானத்தையாவது தமிழ் மக்களின் விருப்பத்திற்கேற்ற நிரந்தர தீர்வை நோக்கி நகர்த்தும் வகையில் கொண்டு வரும்படியே உங்களிடம் கோருகி றோம என தெரிவித்தார். (அ-2-9-250)

## நெல் கொள்வனவில் வர்த்தகர்கள் மும்முரம்

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் சென்ற ஆண்டை விட இவ்வருடம் நெல்லின் விற்பனை விலை ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது

கடந்தவருடம்காலபோகச்செய்கை மழையின்மையால் பெரும் அழிவைச் சந்தித்தது.

ஆயினும் குறைந்த விளைச்சலுடன் அழிவடையாது மிஞ்சிய நெற்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன .

பூநகரி பிரதேசத்தில் அறுவடை செய்யப்பட்ட உடன் வர்த்தகர்கள் நேரடியாக வயல் நிலங்களுக்கு வந்து நெற்களை கொள்வனவு செய்வதனால் நெல்லுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக போட்டி போட்டு நெல் கொள்வனவு இடம்பெறுவதனால் 72 கிலோகிராமுடைய ஒரு மூட்டை நெல்லின் விலை 3 ஆயிரம் முதல் 3 ஆயிரத்து 200 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது.

தற்போது கொள்வனவு செய்யப்படுகின்ற விலையை கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் ஆயிரம் ரூபா அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-84)

## சட்டவிரோத மீன்பிடி; மூவருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டமை மற்றும் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டின் கீழ் சம்பந்தப்பட்ட மூவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, குற் றஞ் சாட்டப்பட்ட மூன்று நபர்களும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் தடை செய்யப் பட்ட மீன்பிடி உபகரணங்களைக் கொண்டு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு பெருமளவு பணத்தை ஈட்டிவந்துள்ளனர்.

இதனால் சாதாரண மீன்பிடித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து குறித்த சட்டவிரோத தொழில் நடவடிக்கையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரச் சென்ற முல்லை.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரை குறித்த மூவரும் சேர்ந்து தாக்க முற்பட்டதோடு,அவர்களின் கடமைகளுக்கும் இடையூறு விளைவித்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிஸார் முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மேற்படி வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்ட மூவரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9)



யு.என்.எச்.சி.ஆர். கிளிநொச்சிமாவட்டகிளையினால் முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள மு/அம்பாள்புரம் தமிழ் வித்தியாலயம், மு/கொல்லவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/பொன்னகர் தமிழ் வித்தியாலயம், மு/அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்ட வேளை...(படம் மல்லாவிச் செய்தியாளர்

## நம்பிக்கை மோசடி செய்த நபருக்கு கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

உழவியந்திரப் பெட்டியை நம்பிக்கையினடிப்படையில் உரிமையாளரிடம் பெற்று அதனை விற்பனை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபருக்கு ஒரு வருடகடூழிய சிறைத் தண்டனையை முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியைச் சேர்ந்த நபரொருவரிடம் உழவு இயந்திர பெட்டியை நம்பிக்கை அடிப்படையில் ஒருவர் பெற்றுள்ளார்.

ஆயினும் அதனை உரிமையாளரிடம் மீளளிக்காமல் அவருக்கு தெரியாமல் விற்பனை செய்துள்ளார்.

இதையடுத்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உழவு இயந்திரத்தின் பெட்டியை மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு வாகன உரிமையாளரால் முல்லைத் தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று வந்தன.

இந்நிலையில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் முல்லை.மாவட்ட நீதிபதி ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையைவிதித்து தீர்ப்பளித்துள்ளார்.

அத்தோடு மாங்குளம் பொலிஸாரினால் வாகனம் மீட்கப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பிரகாரம் வாகனம் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-9)




## குழுக்களிடையே மோதல்; மோ.சைக்கிள் தீக்கிரை

(பூந்தோட்டம்)

வவுனியா அனந்தபுளியங்குளம் கிராமத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் மோட்டார் சைக்கிளொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இறைச்சிக்காக மாடுகளை கொள்வனவு செய்யும் குழு வொன்று அனந்த புளியங்குளம்கிராமத்திற்குசென்று அங்குள்ள மாடு களை கலைத்துக் கொண்டு வந் துள்ளனர்.

அச்சமயம் கிராம மக்களுக்கும் மாடுகளை கலைத்து வந்த குழுவினருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இவ்வாய்த்தர்க்கம் குழுமோதலாக மாறியுள்ளது.

இதன்போது மாடுகளை கொள்வனவு செய்யும் குழுவின் மோட்டார் சைக்கிளொன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.(அ-9-266)

## கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாச நிர்வாகிகள் தெரிவாகினர்

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச நிர்வாகத் தெரிவுகள் நேற்றுமுன்தினம் காலை உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் தலைமையில் ஆரம்பமானது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் பேராளர்கள் 68 பேர் கலந்து கொண்டு நிர்வாகத் தெரிவுகள் நடைபெற்றது.

இதில் தலைவராக அந்தோனிப்பிள்ளை மரியராசா,உ.ப தலைவராக யோசப் அமலதாஸ் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக: தங்கராசா செல்வேந்திரன், சிவராசா செந்தூர் செல்வன், டோமினிங் சுகந்தன்,பிறான்சிஸ் கொன்சால் யூட்மன் ஆகியோர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் கருத்து தெரிவிக்கையில், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த முல்லை.மாவட்ட சமாசம் மீள்குடியேற்றத்தின் பின்பும் வடக்கு மாகாண சபை தேர்தலின் பின்பும் மக்கள் தமது விருப்பிற்கேற்ப தலைவர்,உ ப தலைவர் மற்றும் நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பது இதுவே முதல் தடவையாகும் என்றார். (அ-6)

## ஓய்வூதியர்களுக்கு கடன் திட்டம்

அரச சேவை செய்து ஓய்வு பெற்ற 70 வயதிற்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கான சம்மான எனும் கடன் திட்டத்தை பான் ஏசியா வங்கி அறிமுகம் செய்துள்ளது.

இக்கடனை பிணைகளோ பொறுப்புக்களோ இன்றி 5 இலட்சம் வரை கடனைப்பெற முடியும் என வங்கி அலுவர் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரச ஓய்வூதியர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்திற்கு வருகை தரும் பான் ஏசியா வங்கி அலுவலர்களிடம் தமது பதிவுகளை மேற்கொண்டு கடனுக்கு விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது. (அ-9-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேரணையின் கடுமையை தணிக்க அரச குழு தென்னாபிரிக்கா பயணம்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு

**(கொழும்பு) ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் முன்னெடுப்பில் கொண்டு வரப்பட வுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையின் கடுமைத் தன்மையை தணிப்பதற்காக அல்லது நீர்த்துப் போகச் செய் வதற்காகவே இலங்கை அரசு தென்னாபிரிக்காவிற்கு தூதுக் குழுவொன்றை அனுப்பியுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு தெரிவித்துள்ளது.**

கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பான முயற்சிகளில் தென்னாபிரிக்கா அக்கறை செலுத்தி வந்திருக்கின்ற போதிலும், இலங்கை அரசாங்கம் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியதாகவும தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தமிழோசையிடம் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் தென்னாபிரிக்க அரச பிரதிநிதிகள் பல தடவைகள் இலங்கை வந்து பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளனர், ஓராண்டுக்கு முன்னர் இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் தனித் தனியாக தென்னாபிரிக்கா சென்று வந்துள்ளனர்

ஆனால், இலங்கை அரசாங்கம் முன்னேற்றம் காட்டத் தவறியபடியாலேயே தென்னாபிரிக்காவின் ஈடுபாட்டில் முன்னேற்றம் ஏற்பட வில்லை.

கடந்த பொதுநலவாய மாநாட்டின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வின் வேண்டுகோளின் பிரகாரம் இலங்கைக்கு உதவ முன் வந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் தென்னாபிரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துச் சென்றார்.

ஆனால், ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்று வரவுள்ள சூழ்நிலையில், இன்னொரு நாடொன்றின் அனுசரணையுடன் நல்லிணக்க முயற்சிகள் நடப்பதாக சர்வதேசத்துக்கு காட்டும் முயற்சியாகவே தென்னாபிரிக்காவுக்கு அரச தூதுக்குழு சென்றுள்ளது.

எனினும் தென்னாபிரிக்காவின் பங்களிப்புடன் நடக்கும் இணக்க முயற்சிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீணாக்குகிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல், தென்னாபிரிக்கா ஊடான முயற்சிகளில் நன்மை உள்ளவரை அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

ஆனால், சர்வதேசத்தை ஏமாற்றும முயற்சியாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அவற்றுக்கு தமது கட்சி ஒத்துழைப்பு வழங்காது.

இதேவேளை, இலங்கை அரசின் தென்னாபிரிக்கப் பயணத்தை ஜெனீவா தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சி என்று கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னாபிரிக்காவின் பங்களிப்பையும் சந்தேகிக்கிறதா? என்று தமிழோசை வினவியது.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன்,

நாங்கள் அப்படிச் சொல்லவில்லை, இலங்கை அரசாங்கத்தையே விமர்சிக்கின்றோமே தவிர, தென்னாபிரிக்காவை அல்ல என்று கூறினார்.

எதிர்காலத்தில் தென்னாபிரிக்கா உள்ளிட்ட எந்தவொரு சர்வதேச நாடோ அல்லது ஐநா உள்ளிட்ட அமைப்புகளோ இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வந்தால் அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளத் தயார் என்றும் அவர் கூறினார். (அ-2)

### இரு நூல்கள் வெளியீடு

தி.தவரத்தினம் எழுதிய "நீருயிர் வளம்," "கல்வி உலகினருக்கான தகவல் களஞ்சியம்" ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல்ஒருமணிக்குயா/விக்ரோறியாக் கல்லூரியில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா, பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் ஆசிரியுரையை கவிஞர் வே.குமாரசுவாமி ஆற்றுவார். இந் நூல் வெளியீட்டுரையை திருமதி ப.யோகநாதன் வழங்க மதிப்பீட்டுரையை விஞ்ஞான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி நே.தன பாலசிங்கம் நிகழ்த்துவர். (அ-2)



யாழ்.ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலய வலயமட்ட கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் தரம் இரண்டு மாணவர்கள் புதிய மாணவரை மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்பதையும் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மாணவனுக்குப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# வலி.வடக்கு மீள்குடியேற்றம் தொடர்பில் சிறந்த தீர்வு கிடைக்கும் என நம்புகிறேன்

## வடக்கு மாகாண உறுப்பினர் அங்கஜன் தெரிவிப்பு

வட மாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கும் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி உதய பெரேராவிற்கும் இடையே வலி வடக்கு மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கலந்துரையாடலானது நேற்று மதியம் 2 மணியளவில் கட்டளைத்தளபதி காரியாலயத்தில் இடம்பெற்றது. இரண்டு மணி நேரம் நீடித்த இக் கலந்துரையாடல் தொடர்பாக வட மாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வலி.வடக்கு வசாவிளான், பலாலி, குரும்பசிட்டி, வீமன்காமம், மீள் குடியேற்றம் தொடர்பாக மக்கள் விடுத்த வேண்டுகோளிற்கிணங்கவும் எனது சொந்த நிலப்பற்று காரணமாகவும். வசாவிளான், பலாலி, குரும்பசிட்டி, வீமன்காமம், போன்ற பிரதேசங்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக யாழ்மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேராவை சந்தித்து கலந்துரையாடினேன்.

ஏற்கனவே இம் மீள் குடியேற்ற பிரச்சினை தொடர்பாகவும் மக்களின இயல்பு வாழ்க்கையில் உள்ள பாதிப்பு தொடர்பாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் உரையாடியதை அடுத்து யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியிடம் சில கோரிக்கைகள் விடுத்திருந்தேன். அதற்கமைவாக யாழ் மாவட்டத்தில் 215 உள்ளூர் காவலரண்களையும் மற்றும் 40 இராணுவ சிற்றுண்டிச் சாலைகளை அகற்றியதுடன் இராணுவத்தினரால் பயிரிடப்பட்டு உள்ளூர் பொதுச்சந்தைகளில் விற்கப்பட்ட மரக்கறி சந்தைப்படுத்தலை தடுத்து நிறுத்தியுள்ளார்.

இது தவிர ஆனையிறவு பகுதியில் மக்களது போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்த காவலரண்களையும் அகற்றி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிவகுத்துள்ளார்.

என்னால் விடப்பட்ட இக் கோரிக்கைகளை நிறைவேற்றி தந்தமைக்கு முதலில் எனது நன்றிகளை தெரிவித்திருந்தேன். அத்துடன் இவர் நிறைவேற்றி தந்த விடயங்கள் மூலமாக இன்று மீள்குடியேற்றம் தொடர்பாக கலந்துரையாடி சிறந்த தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை எனக்கு அளித்தது.

மேலும் நேற்றுமுன்தினம் ஆனையிறவில் பேருந்தினை நிறுத்தி சோதனையிடுவதாக மக்கள் தெரிவிப்பதாக தெரியப்படுத்தியபோது அதை மறுத்த கட்டளைத்தளபதி யாழ். மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கையில் மக்களுக்கு எவ்வகையிலும் இடையூறு ஏற்படாது எனவும் உறுதியளித்தார்.

ஒரு தீர்வு கிடைக்கப்பெற வேண்டுமெனில் முதலில் தீர்வை எவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமோ அவருக்கு அப்பிரச்சினை விளங்கிக் கொள்தல் அவசியமாகும். பிரச்சினையை உணர்ந்து விளங்கி கொண்டால் மாத்திரமே அவர் எமக்கு தீர்வை வழங்க முடியும். அந்த வகையில் நோக்கும் போது எமது பிரச்சினையை அவர் அடையாளங் கண்டுள்ளார். ஆகவே அவர் மீள் குடியேற்றம் சம்பந்தமாக குறிப்பிடும் போது இம் மீள் குடியேற்ற பிரச்சினைக்குரிய தீர்வானது சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தீர்வாக எடுக்கப்படல் வேண்டும்.

இது தவிர நேற்றைய தினம் மக்களால் எனக்கு அளிக்கப்பட்ட சுமார் 600 குடும்பங்களின் மீள் குடியேற்ற விண்ணப்பங்களையும் யாழ்மாவட்ட கட்டளைத்தளபதி உதய பெரேராவிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொடுத்த வாக்கு

…மந்திர தந்திரங்கள் தெரிந்து சாஸ்திரங்களைக் கற்ற துணிச்சலான இளைஞன் அந்த சூழலுக்குள் போய் அங்குள்ள யட்சமாயாவியை வென்றுவிட்டால் அவனுக்கு பெரும் புதையலும் எட்டுமாபெரும் சித்திகளும் கிட்டும்.


ஆனால் அவன் மட்டும் தோற்றுப் போனால் நரகலோகத்திற்குத் தான் போக வேண்டி வரும்.

அங்கு போய் வரத் தகுதி பெற்றவனையும் நான் தேர்ந்து எடுத்து விட்டேன்.

அவன் பெயர் ஆனந்தன். அவன் குருகுலத்து கல்வியை முடித்துக் கொண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான் நம் தலைநகருக்கு வந்திருக்கிறான்.

அவன் நன்கு படித்த இளைஞன். துணிச்சல் மிக்கவன். தற்போது நம்மூர் பிரபல வியாபாரி நவகோடி நாராயணன் வீட்டில் தான் தங்கி இருக்கிறான்.

நாம் அவனை வரவழைத்து யட்ச பர்வதத்திற்கு அனுப்பலாம்" என்றான்.





ஆனந்தன் என்ற பெயரைக் கேட்டதுமே ஜெயசீலன் திடுக்கிட்டான்.

ஏனெனில் அதுவரை தன் குருகுலத்து நண்பனைப் பற்றி நினைக்கவே இல்லை.

அவனது பெயரைக் கேட்டதும் தான் அவனுக்கு சத்தியம் செய்து கொடுத்ததும், தன் குரு அதைக் காக்க வேண்டும் என்று கூறியதும் நினைவிற்கு வந்தது.

அதனால் அவனைக் கண்டு பேசுவது எப்படி என்று தயங்கினான்.

பிறகு அவன் சற்று யோசித்து விட்டு துர்ஜெயனிடம் "சரி, அந்த ஆனந்தனையே வரவழைத்து இதனைச் செய்யச் சொல்வோம்.

அவன் வெற்றி பெற்று வந்தால் கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பி விடுவோம்" என்று கூறினான்.

ஆனந்தன் வந்ததும் ஜெயசீலன் பரிவுடன் அவனது நலம் விசாரித்தான்.

அதன் பின் யட்சபர்வதத்தைப் பற்றிக் கூறினான். அப்போது ஆனந்தன் "நாம் இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்களே.

குருகுலத்தில் உனக்கு நான் எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கிறேன்.

உனக்கு ஒரு பிரச்சினை என்றால் அதை தீர்க்க நான் உதவாமலா இருந்து விடுவேன்? நான் யட்சபர்வதத்திற்குப் போய் அங்குள்ள செல்வத்தை அடைந்து கொண்டு வந்து கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் யட்ச பர்வதத்திலுள்ள சிவன் கோவிலை அடைந்து அதன் எதிரே உள்ள நதியில் குதித்து அதிலுள்ள சுழல் பகுதியை அடைந்தான்.

ஆனந்தனோடு சென்ற ஜெயசீலன் அவன் அந்நதியிலிருந்து எப்போது வருவான் என்று எதிர் பார்த்துக் கரையில் காத்துக் கொண்டிருந்தான்.

நதியிலிருந்து சற்று நேரத்தில் ஆனந்தன் முன்பிருந்ததை விட இரு மடங்கு ஒளியுடன் வந்ததை அவன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

கரைக்கு வந்த அவனிடம் ஜெயசீலன் ஆவலுடன் "புதையல் கிடைத்ததா?" என்று கேட்டான். ஆனந்தனும் புன்னகை புரிந்தவாறே" என்னோடு சற்றும் பயப்படாமல் வா அதைக் காட்டுகிறேன்" என்று கூறி அவனது கையைப் பற்றிக் கூட்டிக் கொண்டு போய் நதிக்குள் இறங்கினான். இருவரும் சுழலுள்ள இடத்திற்குப் போய் முங்கி அடிமட்டத்திற்குச் சென்றார்கள்.

அங்கு தங்கமும் நவரத்தினங்களும் குவியல் குவியலாக உள்ளதை ஜெயசீலன் கண்டான். ஆனந்தனும் ஜெயசீலனிடம் "இவற்றை எடுத்துக்கொண்டு போய் மக்கள் நலனுக்கான பணிகளைச் செய்.

ஆனால் இதற்குப் பரிசாக எனக்குப் பணமோ அல்லது நவரத்தினங்களோ வேண்டாம். ஆனால் நான் கேட்பதைக் கொடுக்க வேண்டும்" என்றான். ஜெயசீலனும் "நீ என்ன கேட்டாலும் கொடுக்கிறேன்" என்று கூற. ஆனந்தனும் "நீ குருகுலத்தில் படித்த போது எனக்குக் கொடுத்த வாக்கின்படி என்னை உன் முதல் அமைச்சராக நியமிக்க வேண்டும்" என்றான். அதைக் கேட்ட ஜெயசீலன் சற்றுத் திகைத்துத் தான் போனான். பிறகு கண்களில் நீர் ததும்ப அவன் ஆனந்தனின் கால்களில் விழுந்து வணங்கி "நீ மனிதர்களின் மாணிக்கம். நீதான் இப்போது முதல் என் முதலமைச்சர். இனி நீ சொல்கிறபடி தான் நான் ஆட்சி புரிவேன்" என்று கூறினான்.

(முற்றும்)

## 02.2014 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1495 - பிரான்ஸ் மன்னன் எட்டாம் சார்ல்ஸ் நேப்பில்சை அடைந்து அந்நகரத்தைக் கைப்பற்றினான்.
- 1658 - டச்சுக்காரரினால் மன்னார் கைப்பற்றப்பட்டது.
- 1819 - ஸ்பெயின் புளோரிடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு விற்றது.
- 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: புவெனா-வஸ்டா நகரில் இடம்பெற்ற போரில் 15,ஆயிரம மெக்சிக்கர்களை 5,ஆயிரம் அமெரிக்கப் படைகள் தோற்கடித்தன.
- 1848 - பாரிசில், லூயி பிலிப் மன்னனுக்கெதிராக புரட்சி வெடித்தது. இரண்டு நாட்களின் பின்னர் அவன் முடி துறந்தான்.
- 1853 - வோஷிங்டன் பல்கலைக்கழகம் எலியட் செமினறி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவராக ஜெபர்சன் டேவிஸ் அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1882 - சேர்பிய பேரரசு மீள உருவாக்கப்பட்டது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பிரிவானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் ஐக்கிய அமெரிக்காவின் தோல்வியைத் தொடர்ந்து அமெரிக்கத் தளபதி டக்ளஸ் மக்கார்த்தரை வெளியேறுமாறு அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட் பணித்தார்.
- 1943 - நாசி ஜேர்மனியில் வைட் ரோஸ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர்.
- 1948 - செக்கோசிலவாக்கியா கம்யூனிசப் புரட்சி இடம்பெற்றது.
- 1958 - எகிப்தும் சிரியாவும் இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசை அமைத்தன.
- 1961 - ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகத்திற்கு கொங்கோவில் கொல்லப்பட்ட கறுப்பினத் தலைவர் பத்திரிசு லுமும்பாவின் நினைவாக அவரது பெயர் சூட்டப்பட்டது.
- 1969 - பீட்டில்சின் அனைத்து அங்கத்தவர்களும் கடைசித் தடவையாக சேர்ந்து பாடல் பதிவில் ஈடுபட்டனர்.
- 1974 - சாமுவேல் பிக் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனைக் கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

1979 - சென் லூசியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

- 2002 - அங்கோலாவின் அரசியல் தலைவர் ஜொனாஸ் சவிம்பி இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்.
- 2002 - இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வவுனியாவில் கைச்சாத்திடப்பட்டது.
- 2006 - பிரித்தானியாவின் சரித்திரத்தில் மிகப் பெரும் கொள்ளை கெண்ட் நகரில் இடம்பெற்றது. 53 மில்லியன் பணத்தை அறுவர் சேர்ந்து கொள்ளையிட்டனர்.


### பிறப்புகள்

- **1732 - ஜார்ஜ் வாஷிங்டன், ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர (இ. 1799)**
- 1824 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (இ. 1907)
- 1857 - பேடன் பவல், சாரணர் இயக்க நிறுவநர் (இ. 1941)
- 1879 - ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்ட்டெட், டென்மார்க் வேதியியலாளர் (இ. 1947)
- 1914 - ரெனாட்டோ டுல்பெக்கோ, உடலியக்கவியல் மருத் துவப் பிரிவின் நோபல் பரிசைப் பெற்றவர்
- 1932 - எட்வர்ட் கென்னடி, அமெரிக்க செனட்டர் (இ. 2009)
- 1936 - மைக்கேல் பிஷப், உடலியக்கவியல் மருத்துவப் பிரிவின் நோபல் பரிசைப் பெற்றவர்
- 1938 - கோவை மகேசன், சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர், நாட்டுப்பற்றாளர் (இ. 1992)
- 1962 - ஸ்டீவ் இர்வின் ஆஸ்திரேலிய இயற்கை ஆர்வலர் (இ. 2006)

### இறப்புகள்

- 1556 - ஹுமாயூன், மொகலாயப் பேரரசன் (பி. 1508)
- 1944 - கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (பி. 1869)
- 1987 - அன்டி வார்ஹால், அமெரிக்க ஓவியர் (பி. 1928)
- 2006 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (பி. 1915)

### ஜார்ஜ் வாஷிங்டன்



ஜார்ஜ் வாஷிங்டன் 1732 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார்.

இவர் அமெரிக்கக் கண்டத்தின் படையைத் தலைமை தாங்கி, பிரித்தானியரை அமெரிக்கப் புரட்சிப் போர் என்னும் அமெரிக்க விடுதலைப் போரில் (1775-1783) தோற்கடித்தார்.

இவர் ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் ஆவார். இவர் எட்டு ஆண்டுகள், 1789 முதல் 1797 வரையிலும், ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகத் தலைமை தாங்கினார். விடுதலை பெற்ற நாடாக ஐக்கிய அமெரிக்கா திகழ்ந்த தொடக்க ஆண்டுகளில் இவர் ஆற்றிய நாடு நிறுவும் பணிகளை நோக்கி இவரை ஐக்கிய அமெரிக்காவின் தந்தை எனப் போற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சதுரகிரி சித்தர்கள்

…அந் நதியில் தண்ணீர் நிறைந்திருக்கும் கல் குண்டாவில் காயகற்ப மூலிகைகளையும் அமுதமென்ற கஞ்சாவையும் போட்டு நாங்களும் எங்களுடைய சீடர்கள் முதலான யாவரும் ஒருங்குகூடி, மத்திட்டுக் கடைந்து, மேலே இருக்கிற அதன் விஷத்தைப் போக்கிவிட்டு அடியிலிருக்கிற ரசத்தைக் கற்பகமாகச் சாப்பிட்டு வந்தோம். அன்றியும் அம் மூலிகையின் இலைச்சத்தைப் புகையிலையுடன் சேர்த்து குடுக்கையில் வைத்து அதன் மேல் தழலேற்றி மூச்சையடக்கி இழுத்து அதிலிருந்து வருகிற புகையைக் கற்பகமாகவும் சாப்பிடுவோம். அதற்காக இந்தக் குண்டா அமைக்கப் பெற்றது என்று கோரக்கர் தெரிவிக்கிறார்.

கோரக்கர் குண்டாவை நோக்கி வணங்கிவிட்டு பெண் சித்தருக்கு உதவியாக இருந்த உமாவிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டோம். மேலே பல முறை இந்த பாதை வழியே பயணப்பட்டுங்கூட நேரமின்மை காரணமாக நேரே மகாலிங்கத்தைத் தரிசித்துவிட்டு சென்ற எனக்கு இன்று உங்கள் முயற்சியால் கோரக்கர் குகையைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது என்று வழிகாட்டி தியாகராாசன் கூறியது நெஞ்சை நெகிழ்விப்பதாக இருந்தது. எல்லாம் கோரக்கரின் கருணை என்றபடியே நடையை எட்டிப் போட்டோம்.

இங்கு ஒரு செய்தியைத் தெரிவித்தேயாக வேண்டும். நடுநடுவே நீர் நிலைகள் எதிர்ப்பட்ட இடங்களில் அருவிச் சத்தத்துடன் போட்டி போட்டுக் கொண்டு வண்டுகளின் ரீங்காரம் இடைவிடாது கேட்டுக் கொண்டே இருக்கும். ஏதோ கம்பியில்லாத் தந்தி போல் ஒரே சீராக ஒலி செல்வதால் வரவரக் குறைந்து ஒலித்து அந்த ஒலிக்குப் பதில் ஒலி போல மற்றொரு ரீங்காரம் வேகமாக ஒலிப்பதும் ஏதோ ரகசிய வார்த்தைப் பரிமாற்றம் போலத் தோன்றும்.

மற்ற இடங்களில் இதனை அவ்வளவாக உணர முடியா விட்டாலும் இந்தக் கோரக்கர் குகையை நெருங்கும் போதும் கோரக்கர் குகையைக் கடந்து செல்லும்போது இந்த அபூர்வ ஒலியலைகளைக் கேட்கலாம்.



கோரக்கர் குண்டா

கூட்டம் குறைந்த சமயங்களில் இங்கு வானரத் தொல்லை அதிகம் என்பதால் கையில் கொம்புடன் செல்வது பாதுகாப்பைத் தரும்.

**இரட்டை லிங்க தரிசனம்**

கோரக்கர் குகையிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் கரடுமுரடான பாதையைக் கடந்து வந்தால் ஒரு திருப்பத்தில் ஒரே பீடத்தில் இரட்டை லிங்கங்கள் அமைந்த சிறிய ஆலயத்தைக் காணலாம்.

## ஆன்மீகம் 41

ஆவுடையார் இல்லாத சுயம்பு லிங்கங்களாகக் காட்சி தரும் இந்த இரட்டை லிங்கங்களுக்கு முன் ஓரடி இடைவெளியில் இரண்டு நந்திகள் காணப்படுகின்றன.

ஆதியில் யாக்கோபு என்னும் இராமதேவ சித்தர்தான் இந்த இரட்டை லிங்கங்களுக்கு உரிய வழிபாடுகளைச் செய்து வந்தாராம். இதற்காகச் சன்னிதியின் அருகிலேயே ஆசிரமமும் அமைத்துக் கொண்டு தங்கினாராம். பூசை முடிந்த பிறகு தவம் செய்வதற்காக சன்னிதிக்கு எதிரே இருக்கும் மலைக்குகைக்குச் சென்று விடுவாராம்.

இந்தக் குகை இராமதேவர் குகை என்று அழைக்கப்பட்டாலும் இங்கு கரடிகள் நடமாட்டம் அதிகம் என்பதால் குகையைக் காண யாரும் செல்வதில்லை. இரட்டை மகாலிங்கம் சந்நிதி பாதையின் எதிர்ப்புறம் சமாதி ஒன்றும் காணப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பு வரை இந்த இரட்டை லிங்கங்களுக்கு அருகிலேயே தங்கி பூஜை செய்து வந்த முனிவர் ஒருவர் திடீரென மரணமடைந்து விடவே, அவரது இறுதி விருப்பத்திற்கிணங்க அவரது உடலை இங்கேயே அடக்கம் செய்தனராம்.

(தொடரும்)




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



53

"சே…சே… நீங்க காலா காலமும் வாழணும். எத்தனை படம் வேணும்னாலும் எடுங்க. என்னால் முடிஞ்சதை செய்றேன்.

இந்தப் படத்துக்கு எத்தனை நாள் வேணும். எப்பப்ப வேணும்னு சொல்லிட்டா நான் எல்லா படத்தையும் இப்ப இருக்கிற கட்சி வேலைகளையும் நிறுத்திட்டு வேலை செய்றேன்" என்றார்.

இருவர் கண்களும் கலங்கின.

பந்துலு கண்ணீர் மல்க வாய்க் குழற "இது என் கடைசி படமா இருந்தாலும் சரி. பிரமாண்டமா இருக்கணும்" என்றார்.

"யாருக்குக் கடைசி படம்னு அவனல்ல தீர்மானிக்கணும். போய் ஷாட் வைங்க. இதோ வந்துட்டேன்" என்று அனுப்பி வைத்தார்.

இருவர் சொல்லும் பலித்தது. ஆனால் வெவ்வேறு விதமாகப் பலித்தது.

படத்தை விரைவில் முடிக்க, பணம் புரட்டப் போன பந்துலு அவர்களின் உடல்மட்டும் பெங்களூரிலிருந்து வந்தது.

பந்துலு அவர்களின் மறைவுக்குப் பின் சித்ரா கிருஷ்ணசாமியை அழைத்து "பந்துலு சாருக்கு நீங்க நெருங்கிய நண்பர். இந்தப் படத்தை நான் முடிக்கணும். அவர் எப்படியெல்லாம் எடுக்க நினைத்தாரோ அப்படி நான் எடுக்க நினைக்கிறேன். அதை முடிக்க ஒரு தயாரிப்பாளரை நீங்களே கொண்டு வாங்க" என்றார் செம்மல்.

அவரும் கொண்டு வந்தார்.



மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படத்தில் எம்.ஜி.ஆர்.

"அந்தப் படத்துக்கு மட்டுமல்ல, பந்துலு சாருக்கும் என் காணிக்கையா அவுங்க பேசிய சம்பளத்தில் பாதி! பந்துலு சார் டைரக்ட் செய்ய இருந்தாங்க. இப்ப அவர் இல்லே. அதனாலே நானே டைரக்ட் செஞ்சு கொடுக்கிறேன். எனக்கு ஒண்ணும் வேணாம்" என்றார் செம்மல்.

"படத்தை இங்கேயே எடுக்கலாம்" என்று அப்போது வந்த தயாரிப்பாளர் மணி அய்யர் சொல்லியும் "வேணாங்க. ஜெய்ப்பூர் அவுங்க தாய்வீடு. அந்த ஊரை நம்ம நாட்டுக்கு தெரியவச்சவங்க அவுங்க. அங்கேயே போய் எடுக்கலாம்" என்று அங்கு போய் சண்டைக் காட்சிகள், மற்ற காட்சிகளை எடுத்தார் செம்மல்.

அப்போது அரசியல் பிரச்சினைகள் குறுக்கிட்டதால், தன்னுடன் இயக்குநர் கே.சங்கரை வைத்துக் கொண்டார்.

படமும். முடிந்தது. தேர்தலும் முடிந்தது. அப்போதும் மீனவ நண்பன், இன்று போல் என்றும் வாழ்க, மதுரை மீட்ட சுந்தர பாண்டியன் படங்களில் டப்பிங் முடியாமல் இருந்தன.

கட்சியின் அமோக வெற்றிக்குப் பிறகு செம்மல் முதல்வராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். அதன் பின்னும் ஐந்து நாள் பதவி ஏற்பு விழாவை தள்ளி வைத்து டப்பிங் வேலைகளை முடித்துக் கொடுத்தார்.


மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படத்தின் கடைசி டப்பிங் கட்டம் (லூப்) முடிந்தது.

செம்மல் மைக்கைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு வெங்காயப் பயிருக்கு நடந்தது என்ன?



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 47-II

(சென்ற வாரத் தொடர்ச்சி)

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இடைக்காட்டு விவசாயிகளின் குறிப்பாக திருசாமியினதும் ஏனைய விவசாயிகளினதும் அவசரமானதும் அவசியமானதுமான வேண்டுகோளின் பேரில் சென்ற வாரத்தின் தொடராக இக்கட்டுரை அமைகின்றது. சென்ற வாரத்தில் கடந்த ஆண்டில் வெங்காயப் பயிரில் நடந்த நிகழ்வுகள் சுருக்கமாக தரப்பட்டது. இவ்வருடம் இன்னும் விவசாயப் பெருமகளுக்கு சோதனைக் காலமாக அமைந்தது துன்பத்துக்குரியது. பருவகாலம் பொய்த்துப் போயிருக்கும் இந்நேரத்தில் வெங்காய செய்கையாளர்களுக்கு இத்துனபத்திலிருந்து மீள வழி செய்தல் நல்லது.

பருவகாலம் பொய்த்ததால் இம்முறை காலபோகத்தில் நட்டபயிர் வளர்ச்சி குன்றி அரை வழியில் நிற்கின்றது. நெல், மரக்கறிப்பயிர்கள் மற்றும் பணப்பயிர்களென அனைத்திற்கும் பிரச்சினை உருவாகியிருக்கின்றது. இதனால் விவசாயப் பெருமக்களுக்கு அறிவுறுத்துவதே கடினமானதாகும். பருவகாலம் மாற்றமடைந்துள்ளதனால் தமது வருமானத்தை பாதுகாக்க விவசாயிகள் தமக்கு விரும்பிய பயிர்களை தெரிவு செய்வது தவிர்க்க முடியாததாகும்.

இதைவிட வழக்கமாக தேவைகருதி பயிரிடப்படும் பயிர்களும் இம்முறை எமது உள்ளூர் தேவைக்கே போதுமானதாக இல்லாதிருக்கும் நிலையில் தெற்கிலிருந்து காய்கறிகள் எமது சந்தையை மொய்ப்பதை நாம் தவிர்க்க முடியாமலும் போய்விடும். இம்முறை தருவிக்கப்படும் காய்கறிகள் தொடர்ச்சியாக உள்ளூர் சந்தைகளை நிரப்பும் போது உள்ளூரில் இவ்வளவு இன்னல்களுக்கு மத்தியிலும் பயிர்செய்து அறுவடையாகும் காய்கறிகளை நல்ல விலைக்கு விற்க முடியாதளவிற்கு வெளியூர் மரக்கறிகள் வந்துவிடும் நிலையில எமது விவசாயிகளின்எதிர்பார்ப்பு இன் னும் ஏமாற்றமாகவேபோக வாய்ப்புக்களுண்டு.

வெங்காயத்தின் விலை சந்தையில் தளமபலடையத் தொடங்கிய நிலையில தற்போது அதனது உறபத்தியிலும் இடிவிழுந்தது போல வெங்காய செய்கை எதிர்பார்த்த பலனைத் தரப் போவதில்லை. குறிப்பாக இடைக்காட்டு விவசாயிகள் தமது விவசாய கடனை சென்ற வருடமும் இம்முறையும் பயிர்ச் செய்கையிலேற்பட்ட இடர் காரணமாக மீள செலுத்தமுடியாமல் போய்விடுமோ என அங்கலாய்க்க வைத்திருக்கின்றது.









நுணக்குக்காட்டியில் அவதானிக்கப்பட்ட பூஞ்சணத்தின் வித்திகள்

இம்முறை மழை மிகவும் தாமதமாக பெய்தது வெங்காயத்தை நடுகை செய்வதில் பின்னக்கச் செய்திருக்கின்றது. இதனால் விவசாயிகள் வெங்காய நடுகையை பின்தள்ளி டிசெம்பர் மாத கடைசியில் அல்லது ஜனவரி மாதத்தில் நடுகை செய்ய வேண்டிய நிலையேற்பட்டது. பிந்தி நடுகை செய்ததால் வெங்காயப் பயிரின் வளர்ச்சி ஜனவரி கடைசியில் வழமையான அளவுக்கிருக்கவில்லை.

இந்நிலையில் வழக்கமாக அதிகரிக்கும் பனி இம்முறை மிகவும் கூடுதலாகவே இருந்ததனால் வெங்காயப் பயிரினால் எதுவும் செய்யமுடியாத நிலையில் வெளிறல் ஏற்படத்தொடங்கி விட்டது.

வெளிறல் ஏற்பட்டமைக்கு பல காரணங்களை ஊகிக்க முடியும். குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிரின் வளர்ச்சி சுமாராகவே இருந்தது பல சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. வெங்காயப் பயிரில் பூஞ்சண தொற்று ஏற்பட்டதற்கான அறிகுறிகள் அதிகமாகவே காணப்படுகின்றன. இப்பூஞ்சண தொற்றுதலுக்கு நிலத்தில் ஏலவே இருந்த மண்வாழ் பூஞ்சணங்கள் காரணமாகும். வெங்காயப் பயிர் வலுவிழந்து காணப்பட்டமை பூஞ்சணங்களின் இலகுவான தொற்றுதலுக்கு காரணமாகும். தொடர்ந்து பெய்த அதிகரித்த பனி இரவு வெப்ப நிலையை கணிசமான அளவுக்கு குறைத்து விட்டது இன்னொரு காரணமாகும்.

இவ்வாறு வெப்பநிலை குறைந்தது பூஞ்சணங்களின் தொற்றுதலுக்கும் வளர்ச்சிக்கும் வாய்ப்பாகிப் போயிருக்கின்றது. வசதி கிடைத்தால் விரைந்து பெருகும் குணமுடைய இம் மண்வாழ் நோயையுருவாக்கும் பூஞ்சணங்கள் சிறந்த அனுகூலமான சூழல் கிடைத்ததால் பல்கிப் பெருகிவிட்டன. வெங்காயப் பயிரின் பிந்திய நடுகையும் வெங்காய பயிரின் விருத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது.


இவையெல்லாம் சேர்ந்து வெங்காயப் பயிரை மேலும் வளர விடாது வெங்காய தாள்கள் சுருண்டு வெளிறி நோயின் தீவிரத்தை வெளிக்காட்டியிருக்கின்றன.

விவசாய பெருமக்கள் மாறி மாறி பரிந்துரை க்கப்பட்ட பூஞ்சண நாசினிகளை விசிறிய போதும் இப்பூஞ்சணங்கள் அனுகூலமான சூழலில் விரைந்து விருத்தியடைந்ததனால் பூஞ்சண நாசினிகள் மேலதிகமாக எதனையுமே செய்யமுடியவில்லை.

பல பூஞ்சணங்களின் தொற்றுதல் வெங்காயப் பயிரை அதன் வளர்ச்சியை முடுக்கிவிட்டதாகவே கருதமுடிகின்றது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சூழல் மாற்றம் வெங்காய பயிரை இந்தளவிற்கு துவம்சம் செய்ததை இனியொருமுறை ஏற்படாதவாறு நாம் மாற்று வழிகளை பரிந்துரை செய்ய வேண்டும்.

மாறிவரும் சூழல் எமக்கு சாத மான தாக இரு க்கப்போவதில்லை. இதற்கு நாம் இன்னும் கவனமாக பயிர்ச் செய்கையில் புதிய உத்திகளை பயன்படுத்த வேண்டும். தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியங்களின் அரசியல் விவகாரங்களுக்கான பணிப்பாளர் மேரி ஜமிற்றா மற்றும் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் ஆகியோர் வடமாகாணத்தில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை உருவாக காரணமான சாரணர் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபு

**சாரணர் அமைப்பொன்றை உலகிற்கு பெற்றுத்தந்தவர் பேடன் பவல் பிரபு. இந்த உயர்ந்த மனிதனுடையதும் மனைவியினதும் ஜனன தினமும் சர்வதேச சிந்தனை நாளுமான இன்றைய தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாக்கப்படுகிறது.**

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டும் எனில் அச் சமூகத்தில் உள்ள சிறு பிள்ளைகள் உடல், உள ஆரோக்கியத்துடன் அறிவு, திறன், நேர்மனப்பாங்கு முக்கியமாக வளர்க்கப்படல் வேண்




டும். அப்போது தான் சமூகமும் முன்னேற்றம் அடையும். இதனை உணர்ந்து கொண்டவர் தான் லண்டனைச் சேர்ந்த பேடன் பவல்.

இவர் வெளிநாட்டு யுத்தங்களுக்கு தலைமை தாங்கி இராணுவ மாவீரனாக தன்னை வெளிக்காட்டிய போதும் இறுதியில் யுத்தம் தீர்வாக அமையாது; இவ் உலகிற்கு சமாதானம் ஒன்றுதான் தீர்வாக அமையும்.

அதுவே நிலையானதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினை உறுதியாக கொண்டு தன்நாட்டு இளம் சிறார்களை இதற்காக தயார்ப்படுத்தினார்.

இவருடைய முதலாவது நடவடிக்கையாக "இளைஞர் சாரணியம்" என்ற கைநூல் வெளியிட்ட போது, இதனைப் பார்த்த புத்திஜீவிகள் மற்றும் உயர் சமூக வகுப்பினரின் கவனத்தை ஈர்த்ததுடன் வரவேற்பையும் கொடுத்தது.

அவர்களின் பாராட்டும், உதவிகளும் சாரணர் அமைப்பின் சமூகத்திற்கு தேவையினை உயர்த்தியதாக காணப்பட்ட அதேவேளை ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெறுவதற்கும் இவர் எழுதிய இந்த இளைஞர் சாரணியம் முக்கிய காரணமாக அமைந்தது.

இளைஞர் சாரணியத்திற்கு கிடைத்த ஒத்துழைப்புடன் பேடன் பவல் 20 சிறார்களை ஒன்று திரட்டி பிறவுன் ஸித் தீவில் சோதனை முகாம் அமைத்தார்.

அவருடைய முயற்சி இன்று உலகம் முழுவதும் 20 மில்லியனுக்கும் மேற்பட்ட சிறார்களைக் கொண்ட மிகப்பெரிய சாரணர் உறுப்பினரைக் கொண்டதான அமைப்பாக மாறியிருக்கின்றது.

இதனை உருவாக்க காரணமாக இருந்த பேடன் பவல் இராணுவ அனுபவத்தைக் கொண்டும் தனது வெற்றி கொண்ட பகுதி மக்களின் பண்பாட்டு விடயங்களை உட்படுத்தியும் சாரணர் என்ற ஒரு அமைப்பினை ஸ்தாபித்தார். இவருடன் மனைவியும் துணையாக செயற்பட்ட தன்மை என்பன இதன் வளர்ச்சிக்கு சக்தியாக அமைந்தது.

இதில் சாரணர், கடல் சாரணர், விமான சாரணர் என்று முப்படைகளுடன் கொண்ட சாரணர் இயக்கத்தில் குருளை சாரணர் 7 தொடக்கம் 11 வயதினர், சாரணர் 11தொடக்கம் 18 வயதினர், திரி சாரணர் 18 தொடக்கம் 24 வயதினர்களுக்கான செயற்பாடுகளில் ஈடுபடலாம். இவர்கள் பாடசாலை குழுக்களாகவோ அல்லது திறந்த குழுக்களாகவோ இருந்து செயற்படலாம்.

இவர்களுடன் விசேட தேவையுடைய சாரணர்களும் காணப்படுவர். சிறைச்சாலை சாரணர்களும் உள்ளனர். இவ்வாறு எந்தவிதத்தில் எல்லாம் சமூகத்தினரை நெறிகை செய்ய முடியுமோ அவர்களுக்கு ஏற்றால் போல் சாரணர் கலைத்திட்டங்கள் காணப்படுகின்றமை சிறப்பாகும்.

எமது மக்கள் பண்பாடு, கலை, கலாசாரம், மதம், தேசிய இனம் என்பதை மறந்து நாகரிக வாழ்க்கை என்று அநாகரிக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கும் இக்காலத்தில். சமூகத்தினரை யாரும் சிந்திக்கவில்லை. இவர்கள் சிந்தித்ததோடு மட்டும் நின்றுவிடாது. ஒவ்வொரு நாட்டிற்கும் தமது சொந்த பணத்தை செலவு செய்து பிரயாணங்களை மேற்கொண்டு அந்த நாடுகளின் பண்பாடு, கலை, கலாசாரம், மதம், தேசியம், இனம், மொழி, நிறம் எனப் பல விடயங்களை



அக்கறை கொண்டு செயற்பட்ட குடும்பம் இவர்கள், மூன்று பிள்ளைகளுக்கு பெற்றோர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருமதி பேடன் பவல் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்தமையால் எமது பிரதேசமும் பெருமையடைகின்றது.

இந்த உலகில் வாழ்ந்து மறைந்தவர்கள் பலர். ஆனால் மறைந்தும்



Lady Baden Powell - Chief Guide of the world
Jaffna Visit - 1958

வாழ்ந்து கொண்டு இருப்போரில் இந்த தம்பதியினர்தான் அதிகமானவரின் இதயத்தில் உள்ளனர். இவர்களை இக்காலத்தில் பார்க்கமுடியாவிட்டாலும் இவர்களின் கொள்கைகளுக்கும் வாழ்ந்த வழிமுறைகளுக்கும் ஏற்றால் போல் வாழும் பலரை பார்க்க முடிகின்றது.

பண்பாடு, கலை, கலாசாரம், மதம், தேசிய இனம், மொழி, நிறம் இவற்றைக் கடந்து வாழும் சாரணர் மத்தியில் பயபத்தி கொண்ட கடவுளுக்கு அடுத்தபடியாக இவர்களைப் பூஜிக்கின்றனர் சாரணர்கள்.

ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் பக்குவத்தை மறந்து செல்லும் இக்காலத்தில் சாரணர்கள் வளர்க்கப்பட்டு நல்ல சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்.

ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
உதவி மாவட்ட ஆணையாளர்,
(அபிவிருத்தி, பொதுத் தொடர்புகள், நிகழ்ச்சி மற்றும் ஊடகம்)
கிளிநொச்சி சாரணர் மாவட்டம்.

# இராணுவத்தில் இணையுமாறு படையினர் நிர்ப்பந்திக்கின்றனர்

## கண்ணீர் விட்டழுத இளம் பெண்கள்

இராணுவத்தில் இணையுமாறு படையினர் தம்மை நிர்ப்பந்தித்து வருவதாகக் கிளிநொச்சியிலுள்ள இளம் பெண்கள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் கண்ணீர் மல்க முறையிட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி புழுதி ஆற்றிலிருந்து மாயவனூர் கிராமத்துக்கு ஏற்றுநீர்ப்பாசனம் மூலம் விவசாய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

குறித்த திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையுடன் அங்கு சென்றிருந்தார். புழுதி ஆற்றினைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்வது தொடர்பில்



ஆராய்ந்த அமைச்சர் அதன் பின்னர் மாயவனூர் கிராம மக்களுடனான சந்திப்பினை மேற்கொண்டு அந்தக் கிராமத்தின் குறை நிறைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

அதன் போது கண்ணீர் விட்டழுத அந்தக் கிராமத்தினைச் சேர்ந்த இளம் பெண்கள், இராணுவத்தினர் தம்மை இராணுவத்தில் இணையவேண்டும் அல்லது வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் வேலை செய்யவர வேண்டும் என நிர்ப்பந்தித்து வருவதாகவும் தம்மால் படையினரின் அழுத்தங்களில் இருந்து மீளமுடியவில்லை என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்குப் பதிலளித்த விவசாய அமைச்சர்,

வலுக்கட்டாயமாக படைச் சேர்ப்பில் பெண்களை ஈடுபடுத்துவதை ஏற்கமுடியாது.

இலங்கை அரசாங்கம் போர்க்காலத்தில் அதிகமான இராணுவத்தினரை உள்வாங்கிய நிலையில் தற்போது இராணுவம் உப்பிப் போயுள்ளது.

போருக்குப் பின்னர் இராணுவத்தின் தேவையில்லை என்ற நிலையில் இவ்வாறான கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் எதற்காக அரசாங்கம் ஈடுபடவேண்டும்.

இதனை ஒரு போதும் ஏற்கமுடியாது என்பதுடன் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இதேவேளை வட்டக்கச்சியிலுள்ள விவசாயப் பண்ணை எமது விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமானது.

அதனை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு எமது பெண்களை அங்கு வேலைக்கு வருமாறு நிர்ப்பந்திக்கின்றது.

விவசாயப் பண்ணை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் அங்கு வேலைக்குச் செல்வதற்கு பெண்கள் அஞ்சுகின்றனர். இந்த நடவடிக்கை அந்தப் பகுதி மக்களின் வறுமைக்கு ஒரு காரணமாகவும் அமைந்துள்ளது.


போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகியும் இதுபோன்ற தொடர் நெருக்கடிகளையும் தொந்தரவுகளையும் எமது மக்கள் எதிர்கொண்டே வருகின்றனர்.

இதன் காரணமாகவே இராணுவத்தினரை எமது பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

இது தொடர்பில் வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்தற்கு உடனடியாக கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவித்தார். (அ-2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வெளியுறவுத் துறையை தி.மு.க. கேட்டுப் பெறவேண்டும்



பிரமாண்டமான மாநாட்டை நடத்தி முடித்திருக்கிறது திராவிட முன்னேற்றக்கழகம். "திருப்புமுனை" மாநாடு என்று பெயரிட்டு பெபரவரி 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் திருச்சி மாநகரை குலுங்க வைத்து விட்டது. எங்கு பார்த்தாலும் இரு வண்ணக் கொடிகள் (கருப்பு - சிவப்பு), கட்அவுட்கள் என்று வரவேற்பு வளைவுகள் திருச்சியில் திருவிழாக் கோலம் பூண்டு விட்டது என்றே சொல்ல வேண்டும். "இது போன்ற மாநாட்டை என் வாழ்நாளில் பார்த்ததில்லை" என்று தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனே சிலாகித்துப் பேசி விட்டார்.

அந்த அளவிற்கு பிரமாண்டமான மாநாடு தி.மு.கவின் திருப்புமுனை மாநாடு. இலங்கை தமிழர்களின் மீதான மனித உரிமை மீறலகளுக்கு சர்வதேச விசாரணை, ஜெனிவாவில் இந்தியாவே முன்னின்று இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை, ஈழத் தமிழர்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வாக்கெடுப்பு உள்ளிட்ட பல்வேறு சப்ஜெக்டுகளில் 15 தீர்மானங்களும் தி.மு.க. பத்தாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இரண்டு நாட்கள் நடைபெற்ற மாநாட்டில் முதல் நாளில் கொடியேற்றத்துடன் மாநாடு தொடங்கியது. தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வயதைக் குறிக்கும் வகையில் அது 90 அடி உயரமுள்ள கொடிக்கம்பம். அதில் கலைஞர் கருணாநிதி கொடியேற்றத்தைத் துவக்கி வைக்க மீதிக் கொடி முழுவதையும் கம்பத்தில் ஏற்றி முடித்தார் அங்கே நின்றிருந்த தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின்.

மாநாட்டில் பேசிய திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி இதை தி.மு.கவை ஸ்டாலினிடம் ஒப்படைத்து விட்டார் கருணாநிதி என்பது போல் ஒப்பிட்டு உரை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. "கொடியின் முதல் ஏற்றத்தைத் துவக்கி வைத்து மீதிக் கொடி முழுவதையும் கொடிக்கம்பத்தில் ஏற்ற மு.க.ஸ்டாலினுக்கு அனுமதி அளித்தார் கலைஞர். அதில் பல அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றன" என்றார் சற்று வித்தியாசமாக.

ஏறக்குறைய 42 தலைப்புகளில் மாநாட்டின் இரு தினமும் பல்வேறு தி.மு.க. முன்னணிப் பிரமுகர்கள் பேசினார்கள். மத்திய இணையமைச்சராக இருந்த எஸ்.எஸ். பழனி மாணிக்கம், "மாநிலத்தில் சுயாட்சி. மத்தியில் கூட்டாட்சி தத்துவத்தை முன்னெடுத்துச் செல்லுகிறோம். இதற்காக மறைந்த முரசொலி மாறன் பாடுபட்டார். தலைவர் கலைஞர் ராஜமன்னார் குழு அமைத்து ஆய்வு செய்தார்" என்றெல்லாம் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவோ, முரசொலி மாறன் டோகாவில் நடந்த உலக வர்த்தக மாநாட்டில் ஆற்றிய அரும்பணிகளை பட்டியலிட்டார்.

தயாநிதி மாறன் பேசுகையில், "தமிழகத்திற்கு மத்திய அமைச்சராக இருந்து கொண்டு வந்த பல தொழிற்சாலைகள், சாலைகள், ஒரு ரூபாய்க்கு போன் பேசும் முறை" உள்ளிட்ட தி.மு.கவின் சாதனைகளை எடுத்துரைத்தார். கவிஞர் கனிமொழி, "இடஒதுக்கீடு முறை அ.தி.மு.கவில் எப்படி சிதைக்கப்படுகிறது" என்பதையும், "சமூக நீதிக்காக போராடும் இயக்கம் தி.மு.க." என்பதையும் விளக்கிப் பேசினார். "தளபதி ஸ்டாலின் வழியில் வெற்றிகளைக் குவிப்போம்" என்று தயாநிதிமாறனும், கனிமொழியும் மாநாட்டில் பேசியது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. துணை பொதுச் செயலாளர் துரைமுருகன், "காவிரியில் இன்று தண்ணீர் வராமல் விவசாயிகள் கஷ்டப்படுவதற்கு அ.தி.மு.க. அரசு செய்த துரோகமே காரணம்" என்று கூறி காவிரி விவகாரத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை விலாவாரியாக விவரித்துப் பேசினார். அவர் தி.மு.க. அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்து காவிரிப் பிரச்சினையை கையாண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன், "கலைஞரை மறவாதீர்கள். தி.மு.கவை மறவாதீர்கள்" என்று உருக்கமாக உரை நிகழ்த்தினார். அது மட்டுமின்றி, தி.மு.கவின் ஆரம்பகால வரலாற்றை விவரமாக எடுத்துச் சொன்னார். கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வரிசையில் பேசியவர்களில் விடுதலை சிறுத்தைகளின் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், "இங்கே சமூக நீதிக் கூட்டணி இருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரின் தலைவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் அங்கே அ.தி.மு.கவில் தே.மு.தி.க. போய் விட்டது. புதிய தமிழகம் போய் விட்டது. மனிதநேய மக்கள் கட்சி போய் விட்டது. ஆனால் இன்னமும் பத்திரிகைகள் அ.தி.மு.க. அணி பலமிக்க அணி என்று எழுதுகிறார்கள். டி.விகளில் பிரசாரம் செய்கிறார்கள். மோடி அலை வீசுவது போலவும், அ.தி.மு.க. அதிக தொகுதிகளில் ஜெயித்துவிடும் என்பது போலவும் பிரசாரம் மேற்கொண்டிருக்கிறார்கள். கருத்து கணிப்புகள் என்ற போர்வையில் கருத்து திணிப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு சில பத்திரிகைகளை படிக்காதீர்கள். சில சேனல்களை பார்க்காதீர்கள்" என்று ஆலோசனை வழங்கினார்.

புதிய தமிழகம் கட்சி சார்பில் பேசிய அக்கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, "சட்டமன்றத்தில் ஜனநாயகம் இல்லை. மக்கள் பிரச்சினைகளை பேச முடியவில்லை. தமிழகத்திற்கு வர வேண்டிய தொழில்கள் எல்லாம் ஏன் பெங்களூருக்குப் போகிறது என்று கேட்டால் ஒரே நேரத்தில் பதில் சொல்ல மூன்று நான்கு அமைச்சர்கள் எழுந்து நின்று கொள்கிறார்கள். ஆனாலும் பதில் சொல்வதில்லை" என்று கவலை தெரிவித்த அவரும், "எங்கள் கட்சிக்கு தென் மாவட்டங்களில் கொத்துக் கொத்தாக வாக்கு வங்கி இருக்கிறது. திருமாவளவனுக்கு வட மாவட்டங்களில் கொத்துக் கொத்தாக வாக்கு வங்கி இருக்கிறது. ஜவஹிருல்லாவிற்கு தமிழகம் முழுவதும் வாக்கு வங்கி இருக்கிறது.

தி.மு.க. தொண்டர்கள் செய்ய வேண்டியதெல்லாம் அரவணைத்து தேர்தல் பணியாற்றினால் போதும். நாற்பதுக்கு நாற்பது இந்த அணிதான் வெற்றி பெறும்" என்று ஆருடம் சொன்னார். அடுத்துப் பேசிய ஜவஹிருல்லா, "சிறுபான்மையினருக்கு மத்திய அரசு பணிகளிலும் இட ஒதுக்கீடு பெற்றுத்தர தி.மு.க. பாடுபட வேண்டும். ரங்கநாத் மிஷ்ரா கமிஷன், சாச்சர் கமிட்டி ரிப்போர்ட் போன்றவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைவிட முக்கியமாக ஈழத் தமிழர்களின் இன்னல்கள் போக்க, அவர்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறலுக்கு சர்வதேச விசாரணை கேட்க வருகின்ற மத்திய அமைச்சரவையில் எந்த இலாகாவை கேட்டு வாங்குகிறீர்களோ இல்லையோ இந்திய வெளியுறவு இலாகாவை தி.மு.க. கேட்டு வாங்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

பிறகு வீரமணி மைக்கைப் பிடித்தார். அவர் தி.மு.க. பற்றிய வரலாறுகளை சுட்டிக்காட்டினார். "1969இல் அண்ணா மறைந்தவுடன் முதலமைச்சர் பொறுப்பேற்க கலைஞர் தயங்கினார். பெரியார்தான் பொறுப்பேற்றுக் கொள்ளச் சொன்னார்" என்றார். அத்துடன் நிற்கவில்லை அழகிரியை அட்டாக் பண்ணினார். பெரியார் ஒரு முறை சுட்டிக் காட்டிய, "தலைவர் இருக்கும் போது தலைக்குத் தலை அம்பலம் செய்யக் கூடாது" என்ற கருத்தை படித்துக் காட்டி, அழகிரியை நீக்கியது தி.மு.கவில் பெரிய பிரச்சினை இல்லை என்பதை வலியுறுத்திப் பேசினார்.

அவர், "சிறிய கட்சி ஒழுங்கு நடவடிக்கையை (அழகிரி நீக்கம்) பெரிதாக்கி தி.மு.க. அஸ்தமனம் ஆகிவிட்டது என்று ஒரு சில பத்திரிக்கைகள் எழுதுகின்றன. இங்கு இருக்கும் கூட்டத்தைப் பார்த்த பிறகும் உங்களுக்கு எப்படி அப்படி எழுதத் தோன்றுகிறது? நானே இக்கூட்டத்திற்கு மக்கள் வெள்ளத்தை நீந்தி காரில் வர முடியாமல் இறங்கி நான்கு கிலோ மீற்றர் தூரம் நடந்தே வந்திருக்கிறேன். ஆகவே இந்த தி.மு.க. எஃகு கோட்டை. இது அஸ்தமனம் ஆகாது" என்று ஆணித்தரமாக வாதிட்டார்.

இந்த மாநாட்டில் "ஹைலைட் ஸ்பீச்" என்றால் அது தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் மற்றும தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோரின் பேச்சுக்கள்தான். ஸ்டாலின், "அ.தி.மு.க. அரசு பதவியேற்ற பிறகு சட்டம் ஒழுங்கு சீரழிந்து விட்டது. தொழிற்சாலைகள் ஏதும் வரவில்லை. தி.மு.க. ஆட்சியில் 4ஆவது இடத்தில் இருந்த தமிழகம் அ.தி.மு.க. ஆட்சியில் 16 ஆவது இடத்திற்குப்போய் விட்டது." என்று பட்டியலட்டு அ.தி.மு.க. அரசின் பட்ஜெட் புத்தகங்களை வைத்துக் கொண்டு "இந்த தட்டத்தை அறிவித்தார்கள். இதுவரை செய்யவில்லை" என்று புள்ளிவிரங்களுடன் விளாசித் தள்ளினார். வழக்கத்திற்கு மாறாக இந்த மாநாட்டில் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி பற்றி அதிக புள்ளி விவரங்களுடன் பேசியது மேடையில் இருந்த அனைவரது புருவங்களையும் உயர்த்தியது.

நிறைவுரையாற்றிய தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தாக்குதலும் அ.தி.மு.க. அரசின் மீதுதான் இருந்தது. "அ.தி.மு.க. ஆட்சி வந்ததும் சமச்சீர் கல்வியை இரத்து செய்தார்கள்" என்று கூறி அது தொடர்பாக அரசுக்கு வந்த நீதிமன்ற கண்டனங்களை விளக்கினார். பிறகு "பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் எநத மாதிரியெல்லாம் மனுப் போட்டு வழக்கை தாமதப்படுத்துகிறார் ஜெயலலிதா அம்மையார்" என்று கூறி அது தொடர்பான விடயங்களை பட்டியலிட்டார். தான் ஏன் "அ.தி. மு.கவை" அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அழைபபதில்லை என்பதை விலாவாரியாக விவரித்தார்.

இறுதியில் கூட்டணி சப்ஜெக்டிற்கு வந்தார். "இப்போது நம்முடன் ஒரு அணி இருக்கிறது. இதில் வேறு சில கட்சிகளும் சேரலாம். அப்போது இந்த அணி பேரணியாக மாறும்" என்று ஆருடம் சொனனார். அத்துடன் கூட்டணிக்கான நிபந்தனைகள் என்ன என்பதையும் மறுவரையறை செய்தார். அதாவது "சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றும் கட்சிகளும், மதவெறி அரசு அமையவிடாமல் தடுக்கும் கட்சிகளும் தி.மு.க. அணிக்கு வரலாம்" என்றார்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் குழுவில் "காங்கிரசுடனும், பா.ஜ.கவுடனும் கூட்டணி இல்லை" என்று அறிவித்தார்கள்,. அதைத் தொடர்ந்து திருச்சியில் நடைபெற்ற திருப்புமுனை மாநாட்டிற்கு சென்ற தி.மு.க. தலைவர் கருணாநிதி, "இந்திய ஒற்றுமை, மதசார்பற்ற தன்மை, ஊழலற்ற நிர்வாகம், மற்றவர்களையும் மதிக்கும் அண்ணாவின் கொள்கை" போன்றவற்றை அடிப்படையாக வைத்து பாராளுமன்றத் தேர்தலை தி.மு.க. சந்திக்கும் என்று அறிவித்தார்.

இப்போது அதிலிருந்து இறங்கி வந்து, "சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றும் கட்சிகள், மதவெறி அரசு அமையவிடாமல் தடுக்கும் கட்சிகள் கூட்டணிக்கு வரலாம்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏற்கனவே தே.மு.தி.கவுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறரார். அதை வெளிக்காட்டும் விதத்தில்தான் திருச்சியில் "விஜயகாந்த் நல்ல ஸ்டென்ட் நடிகர். அவர் பிடிகொடுக்காமல் இருக்கிறார்" என்று தே.மு.தி.கவுடன் உள்ள கூட்டணிப் பேச்சுவார்த்தை பற்றிச் சொன்னார்.

விஜயகாந்தை "ஸ்டென்ட் நடிகர" என்று கூறியதில் சில அர்த்தங்கள் இருக்கிறது. அதாவது தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.கவும், அ.தி.மு.கவும்தான் ஹீரோக்கள். ஏனென்றால் அக்கட்சிகளால்தான் வெற்றிக் கூட்டணிக்கு தலைமை தாங்க முடியும். அதே நேரத்தில் விஜயகாந்த் போன்றவர்கள் வைத்துள்ள தே.மு.தி.க. எல்லாம் "ஸ்டென்ட் நடிகர்" போல்தான். ஆகவே தி.மு.க. என்ற ஹீரோவிடம் ஸ்டென்ட் நடிகருக்கு உள்ள அளவில் தொகுதி எண்ணிக்கையைக்கேளுங்கள் என்பதுதான் இந்த கருத்தின் பின்னணியாக எடுத்துக் கொள்ளலாம்.

அதன்படி பார்த்தால் ஏற்கனவே தி.மு.க.விற்கும், தே.மு.தி.க.விற்கும் இடையே தொகுதிப் பங்கீடு குறித்து திரைமறைவில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது போலவும், அதில் "ஸ்டென்ட் நடிகருக்கு" உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை விட அதிக தொகுதிகளைக் கேட்பது போலவும் தி.மு.க. தலைவரின் இந்த வர்ணனை எடுத்துரைக்கிறது. ஆகவே இந்த புதிய நிபந்தனைகளான சேது சமுத்திரத்திட்டமும், மதவெறி அரசு அமையவிடக கூடாது என்பதும் தே.மு.தி.க.விற்கு பொருந்துகிறதோ இல்லையோ. காங்கிரஸ் கட்சிக்குத்தான் சாலப் பொருத்தம்.

ஏனென்றால் ஆரம்பித்த சேது சமுத்திரத்திட்டத்தை வட இந்தியாவில் உள்ள இந்துத்துவா வாக்கு வங்கிக்கு அஞ்சி கிடப்பில் போட்டது காங்கிரஸ் கட்சிதான் என்று தி.மு.க. நினைக்கிறது. ஆகவே சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற காங்கிரஸ் உறுதி மேற்கொண்டால் மீண்டும் தி.மு.கவுடன் அக்கட்சிக்கு கூட்டணி வைக்கும் வாய்ப்பு பிரகாசமாக இருப்பது போல் அமைநதுள்ளது திருச்சியில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பேச்சு. ஏனென்றால் "மதவெறி அரசு அமையக் கூடாது" என்பதுதான் காங்கிரஸின் தேர்தல் கோஷமாகவும் இருககிறது.


திருச்சியில் கருணாநிதி இந்தக் கருத்தை வெளியிடுவதற்கு முன்பு, தமிழகத்திற்கு பக்கத்து மாநிலமான கேரளாவில் பேசிய சோனியா காந்தி, "இந்திய ஒற்றுமைக்கு காங்கிரஸ் கட்சி மீண்டும் ஜெயித்து வர வேண்டும்" என்று கூறியது கவனிக்கத்தக்கது. கேர்ளாவில் சோனியாகாந்தியும், திருச்சியில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும் பேசிய அர்த்தம்மிக்க உரைகளின பின்னணியில் மீண்டும் தி.மு.க.- காங்கிரஸ் அணி உருவாகும் சாத்தியக்கூறுகள் இருக்கலாம் என்றே தோன்றுகிறது. அக்கூட்டணியில் தே.மு.தி.கவும் இடம் பெறுமா என்பதுதான் இப்போதைய எதிர்பார்ப்பு.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்காக மட்டும் யுத்தம் இடம்பெறவில்லை

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு



இலங்கையின் பாதுகாப்பு படையினர் போரின் இறுதிக்கட்டத்தில் போர் குற்றங்களை செய்யவில்லை என்று பொறுப்புடன் உலகத்திற்கு விடயங்களை வெளியிடும் அறிக்கையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு ஏன் கையெழுத்திட முடியாது என அமைச்சர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

நவகமுவ பிரதேசத்தில் நடை பெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்திற்காகவோ, ராஜபக்சவினருக்காகவோ யுத்தம் செய்யவில்லை. யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சமாதானத்தின் பிரதிபலன்கள் சிங்களவர்களுக்கு மாத்திரம் கிடைக்கவில்லை.

கொள்கை ரீதியாக அரசியலில் எப்படியான கருத்து முரண்டுகள் இருந்தாலும் அரசியல் ரீதியாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மற்றும் கடமைகளில் ஒரு பகுதியும் உள்ளது.

இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து அறிய ஜெனீவாவில் தனியான யோசனை ஒன்று கொண்டு வரப் படவுள்ளது.

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என எதிர்க் கட் சிகளின் தலைவர்களுக்கு ஏன் வாய்களை திறந்து கூறமுடியவில்லை.

போரின் இறுதிக்கட்டத்தில் படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்ற பொறுப்பை ஏன் அரசியல் கட்சிகள் ஏற்க முடியாது.

அரசாங்கத்திற்காகவோ, ராஜபக்சவினருக்காகவோ யுத்தம் செய்யவில்லை. சமாதானம் சிங்களவர்களுக்கு மட்டுமா பெற்றுக்கொடுக்கப்பட்டது?.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என சகலருக்கும் சமாதானம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

வேறு பிரச்சினைகளில் ஒன்றுபட முடியாவிட்டாலும் நாட்டுக்கு முன் இருக்கும் பிரச்சினையில் அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும் என்றார். (அ-2)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் நேற்று காலை 10 மணிக்கு கடற்றொழில் கிராமிய அமைப்புக்களுடன் நடைபெறவிருந்த சிறகு வலை தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என யாழ் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உத விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்திற்கு சிறகு வலை தொழிலில் ஈடுபடும் சகல கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் தலைவர் செயலாளர் இருவரையும் கலந்து கொள்ளும் படி அவர் கேட்டுள்ளார். (அ-2)

## கலைஞர்களின் விபரங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையினால், பிரதேச கலைஞர்களது விபரங்கள் உள்ளடங்கிய விபரத்திரட்டு நூலொன்று வெளியிட தீர்மானித்திருப்பதால் கலைஞர்கள் தங்களது விபரங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வலிகாமம் கிழக்கு பண் பாட்டுப் பேரவையினர் கேட்டுக் கொள்கின்றனர். (அ-2)

## பாதபூஜை

சுழிபுரம் ஸ்ரீஅம்மா பகவான் சுவர்ணயுவ ஆல யத்தில் ஸ்ரீகல்வி பகவானின் 65 ஆவது ஜெனன தினத்தை முன்னிட்டு மார்ச் 7 ஆம் திகதி வரை பாதபூஜை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் தங்களின் வேண்டுதல்களுக்காக 0777651719 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பாத பூஜைகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அபிவிருத்திசங்க பொதுக்கூட்டம்

யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் கு.விமலன் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அதிபர் ஜி.விமலன் அறிவித்துள்ளார். (அ)


## நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது- ரணில்

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவது குறித்து இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. அரசாங்கம் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத்தவறியுள்ளதாகவும் அரசாங்கத்தின் இந்த நிலைமையில் மாற்றம் தேவை எனவும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

சில திட்டங்கள் தொடர்பில் பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கு மாறு அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அதனை அரசாங்கம் ஏற்கத் தவறியுள்ள தாகத் தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்தே நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி குறித்த யோசனைத் திட்டங்களை கடந்த ஆண்டு தமது கட்சி சமர்ப்பித்தது என அவர் தெரிவித்துள்ளார். அரசியல் சாசன திருத்தம் உள் ளிட்ட பல்வேறு பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். நல்லாட்சியை ஏற்படுத்தும் முனைப்புக்களுக்கு ஆதரவளிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தின் உள் அரங்கத்துடனான வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எம்.ராதாகிருஸ்ணன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஸ்ணகுமார், பாடசாலை அதிபர் வே.கந்தசாமி ஆகியோர் இணைந்து நாடாவெட்டிக் கட்டடத்தை திறந்து வைப்பதையும் பாடசாலைக்கான சுவிஸ் நாட்டின் பழைய மாணவர் சங்கப்பிரதிநிதி மங்கல விளக்கேற்றுவதையும் மாணவியின் நடனத்தையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

## சிவராத்திரியை முன்னிட்டு விழுமிய பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள சிவராத்திரியை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் ஒருநாள் விழுமிய பயிற்சி முகாம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆன்மீக வகுப்பு வீடியோ காட்சிகள், விளையாட்டுக்கள் என்பனவற்றுடன் விசேட நிகழ்வாக வியாழக்கிழமை மாலை 6 மணிமுதல் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிவரை ஓம் நமசிவாய அகண்ட நாம ஜெபம் இடம்பெறவுள்ளது.

இவ்விழுமிய முகாமில் 11 வயது முதல் 16 வயது வரையான மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.

கலந்து கொள்ள விரும்புபவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு முன்னர் சின்மய ஞான வேல், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். பதிவு செய்யும் மாணவர்கள் விழுமிய முகாமின் நிறைவு நாள் வரை பங்கு பெறுவது அவசியமாகும். மேலதிக விபரங்களை 021 222 3447, 077 4939785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (அ-2)

## யாழ்.கல்வி வலயத்தில் கணனிப் பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் அமைந்துள்ள கணனி வள நிலையத்தில் கணனி கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் NVQ Level 2,3,Office Automation, Web Designing, Computer Hardware, O/L ICT, A/L ICT ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை வலய கணனி வள நிலையத்தில் பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-2)

## முகத்தை மூடிய தலைக்கவசத்திற்கு மீண்டும் வருகின்றது தடை

(கொழும்பு)

முகத்தை மூடிய மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்துக்கு மீண்டும் தடை விதிக்கப்படவுள்ளது.

முகத்தை மூடிய தலைக்கவசத்தை அணிந்து மோட்டார் சைக்களில் வந்தவர்களால் சுமார் 20 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான தங்கம் மற்றும் பணம் என்பவை நீர்கொழும்பு பகுதியில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து மீண்டும் முகத்தை மூடிய தலைக்கவசத்துக்கு தடை விதிக்கப்படவுள்ளது.


ஏற்கனவே இந்த நடைமுறை தளர்த்தப்பட்ட போதும் தற்போது அதனை அமுல்செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

முகத்தை மூடிய தலைக்கவத்தை அணியக்கூடாது என்று பல நாடுகள் தடை விதித்துள்ளன.

இந்நிலையில் இதன்காரணமாக தலைக்கவச வர்த்தகம் பாதிக்கப்படுவதாக கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிசிடிவி கமராக்களை பொருத்தினாலும் முகத்தை மூடிய தலைக்கவசத்தை அணிந்து செல்பவர்களின் அடையாளங்களை அவற்றால்காணமுடியாது என்றும்பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஜப்பானிற்கு சவுதிஅரேபியா இளவரசர் சல்மான் பின்-அப்துல் அஜிஸ் அண்மையில் வருகை தந்தார். இதன்போது பிரதமர் ஷிசோ அபேயை டோக்கியோ அரசு மாளிகையில் வைத்து சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பேச்சுவார்த்தைக்கு ஈரான் ஒப்புதல்

(டெஹ்ரான்)

உலக வல்லரசு நாடுகளுடன் அணு சக்தி தொடர்பான இறுதிப் பேச்சுவார்த்தையின் திட்ட வரைவுக்கு ஈரான் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ள ஈரானின் துணை வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்ஸி, இது தொடர்பாக நேற்றுமுன்தினம் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

உலக வல்லரசு நாடுகளுடன் தலைநகர் டெஹ்ரானில் நடைபெற்ற இரு நாட்கள் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஈரானின் அணு சக்தி தொடர்பான விரிவான இறுதி பேச்சு வார்த்தைக்கான திட்ட வரை வுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது என்றார்.

இதேவேளை ஈரான் அணு உலை பிரச்சினை தொடர்பான அடுத்த கட்ட பேச்சு வார்த்தை வியன்னாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும். (2)

# முருகன், சாந்தன், பேரறிவாளன் விடுதலைக்கு மத்தியரசு தயங்கக் கூடாது

## பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து



**(சென்னை) பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்சநீதிமன்றம் குறைத்ததையடுத்து அவர்களும் ஏற்கனவே தண்டனைக் காலம் முடிந்த பின்னர் சிறையில் வாடும் நளினி உள்ளிட்ட நால்வரும் விடுதலை ஆவதற்கான சூழல் உருவானது. ஆனால் மத்திய அரசு தாக்கல் செய்த இரு மனுக்களால் அவர்கள் விடுதலையாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதற்கு பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தூக்கு தண்டனை இரத்து செய்யப்பட்ட மூவரும் ஆயுள் தண்டனையாக கருதப்படும் 14 ஆண்டு சிறைவாசத்தை ஏற்கனவே அனுபவித்து விட்ட நிலையில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 432, 433(ஏ) ஆகிய பிரிவுகளின் கீழ் விடுதலை செய்வது குறித்து சம்பந்தப்பட்ட அரசுகள் ஆய்வு செய்யலாம் என்று உச்சநீதிமன்றமே அதன் தீர்ப்பில் கூறியிருக்கிறது. அதன்படி தண்டனைக் குறைப்புக்கான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடங்கிய நிலையில், மத்திய அரசு அவசரஅவசரமாக உச்ச நீதிமன்றத்தை அணுகி, பேரறிவாளன், முருகன், நளினி உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்ய தடை பெற்றுள்ளது. இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டிய அசாத்திய வேகம் அதிர்ச்சியும் வருத்தமும் அளிக்கிறது.

கடந்த 3 ஆண்டுகளில் பிரதமருக்கு முதலமைச்சர் ஜெயலலிதா 138 முறை கடிதம் எழுதியிருக்கிறார். அவற்றில் ஒன்றின் மீது கூட பிரதமரும் மத்திய அரசும் நடவடிக்கை எடுத்ததில்லை. ஆனால், 7 பேரின் விடுதலை குறித்த தமிழக அரசின் கடிதம் கிடைப்பதற்கு முன்பாகவே மத்திய அரசு அதிரடியாக உச்சநீதிமன்றத்தை அணுகி தடை பெற்றிருக்கிறது.

இதிலிருந்தே தமிழர்கள் விடயத்தில் மத்திய அரசு எந்த அளவுக்கு பழி வாங்கும் உணர்வுடனும், வஞ்சம் தீர்க்கும் வேகத்துடனும் உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

7 தமிழர்களின் விடுதலைக்கு தடை வாங்கிய சில மணி நேரங்களிலேயே பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் தூக்கு தண்டனை இரத்து செய்யப்பட்டதை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரி இன்னொரு மனுவை உச்சநீதி மன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்திருக்கிறது.

இதன்மூலம் அவர்கள் மூவரையும் உடனடியாக தூக்கிலிட வேண்டும் என்று மத்திய அரசு சொல்லாமல் சொல்லியிருக்கிறது. சொந்தக் குடிமகனையே தூக்கிலிட வேண்டும் என்று துடிக்கும் ஒரே நாகரீக நாடு இந்தியாவாகத் தான் இருக்கும்.

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று மத்திய சட்ட அமைச்சர் கபில்சிபல் ஒருபுறம் கூறுகிறார். தூக்கு தண்டனையை நான் ஆதரிக்கவில்லை என ராகுல் காந்தி இன்னொருபுறம் தெரிவிக்கிறார். ஆனால், ராகுல் காந்தியைத் துணைத் தலைவராக கொண்ட காங்கிரஸ் அரசு மூவரையும் தூக்கிலிட வேண்டும் என்று உச்சநீதி மன்றத்தில் வலியுறுத்துகிறது எனும் போது மத்திய ஆட்சியாளர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரிகிறது.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவருமே இந்த வழக்கில் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்கள்.

பேரறிவாளன் உள்ளிட்ட மூவரும் தண்டிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட வில்லை. மரண தண்டனையை எதிர்நோக்கிய மன உளைச்சலுடன் கூடிய 16 ஆண்டு தனிமைச் சிறை உள்ளிட்ட 23 ஆண்டுகால சிறை தண்டனையை அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். இந்தக் கொடிய தண்டனைக்குப் பின்னரும் அவர்களை வாழ விடக் கூடாது தூக்கிலிட்டே தீர வேண்டும் என்று எவரேனும் வலியுறுத்தினால், அவர்கள் மனித நேயம் கொண்டவர்களாக இருக்க முடியாது. மாறாக நவீன சர்வாதிகாரிகளாகத் தான் இருந்தாக வேண்டும்.

எனவே, இந்த விவகாரத்தில் வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் செயற்படுவதை விட்டுவிட்டு, உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுக்களை திரும்பப் பெற்று, 7 தமிழர்களும் விடு தலையாவதற்கு மத்திய அரசு வழி வகுக்க வேண்டும். தேவைப்பட்டால் இந்திய அரசியல் சாசனத்தின் 161 ஆவது பிரிவைப் பயன்படுத்தவும் தமிழக அரசு தயங்கக்கூடாது என்று தெரிவித்துள்ளார். (2)

# தமிழக மீனவர்களை மீட்க மத்தியரசு தவறிவிட்டது

## நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம்

ராஜீவ் கொலையாளிகள் விடுதலை விவகாரம், தமிழக மீனவர்கள் சிறைப் பிடிப்பு, கச்சதீவு விவகாரம் போன்றவற்றை எழுப்பி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தி.மு.க., அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் இரு அவைகளிலும் நாடாளுமன்ற அலுவல்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டன.

அப்போது, கேள்வி நேரத்தை நடத்த விடாமல் "ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐநா மனிதவுரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்" என்று வலியுறுத்தி நாடாளுமன்றத் தி.மு.க குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் அக் கட்சி உறுப்பினர்கள் குரல் எழுப்பினர். ஏ.கே. எஸ். விஜயன், தாமரைச் செல் வன், அப்துல் ரகுமான் உள் ளிட்ட உறுப்பினர்கள் மையப் பகுதிக் குச் சென்று அமளியில் ஈடுபட்டனர்.

இதேபோல, மக்களவை அ.தி.மு.க குழுத் தலைவர் எம். தம்பிதுரை தலைமையில் அக் கட்சி உறுப்பினர்கள், "தமிழக மீனவர்களை மீட்க மத்திய அரசு தவறிவிட்டது. கச்சதீவை மீட்க வேண்டும்" என்று குரல் எழுப்பினர். (2)

# சிரியாவிற்கு நிதியுதவி; ஐ.நா.சபையில் வாக்கெடுப்பு

சிரியப் போரினால் நிலைகுலைந்துள்ள 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் தற்போது பிற நாடுகளின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இவர்களுக்கான உடனடி மற்றும் தடை யில்லா மனிதாபிமான உதவிகள் அளிக்கப்படுவது குறித்த ஒரு தீர்மானத்தை அவுஸ்திரேலியா, லக்சம்பர்க், ஜோர்தான் ஆகிய நாடுகள் ஐ.நா சபையின் முன்பு சமர்ப்பித்துள்ளன.

ஐ.நா சபையில் இன்று இந்தத் தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. இந்தத் தீர்மானம் பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளாலும் ஆதரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் போரினால் முழுவதும் முற்றுகையிடப்பட்டுள்ள ஹோம்ஸ் நகரம் உட்பட மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும் மனிதாபிமான உதவிகளை வழங்க அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளன.

மேலும், சிரியா அரசுத் துருப்புகள் அந்நாட்டின் வடக்கில் உள்ள அலெப்போ நகரத்தல் பயன்படுத்திய பேரல் வெடிகுண்டுகள் போன்று பொதுமக்களுக்கு எதிரான அனைத்துத் தாக்குதல்களும் நிறுத்தப்பட அழைப்பு விடுத்துள்ளது. ரஷ்யாவின் ஐ.நா தூதுவர் விட்டாலி சுர்கின் கடந்த புதன் இரவு இந்தத் தகவலைப் பெற்றதாகவும், தங்களு டைய அரசைக் கலந்துபேச அவகாசம் தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார். (2)

# அமெரிக்க எரிசக்தித்துறை அமைச்சர் அடுத்த மாதம் இந்தியா வருவார்




இந்தியா-அமெரிக்கா இடையேயான எரிசக்தி ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுவார்த்தைக்காக அமெரிக்க எரிசக்தித்துறை அமைச்சர் எர்னெஸ்ட் ஜே மோனிஜ் அடுத்த மாதம் இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார்.

அமெரிக்காவுக்கான இந்தியத் துணைத் தூதர் தேவயானி கைது செய்யப்பட்ட விவகாரத்தையடுத்து, அமெரிக்க கேபினட் அமைச்சர் ஒருவர் இந்தியாவுக்கு வருகை தருவது இதுவே முதன்முறையாகும்.

கடந்த மாதம் நடைபெற இருந்த இந்த பேச்சுவார்த்தை, தேவயானி விவகாரத்தால் ஏற்பட்ட சர்ச்சைகளால் ஒத்திவைக்கப்பட்டது. இந்தியா வரும் எர்னெஸ்ட் அடுத்த மாதம் 10, 11 ஆகிய திகதிகளில் இந்திய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இந்தியாவுக்குச் சுற்றுச் சூழலை பாதிக்காத எரிசக்தியை வழங்குவது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமும் இந்த பேச்சுவார்த்தையின்போது கையெழுத்தாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்கா சென்றபோது ஜனாதிபதி ஒபாமாவுடன் நடைபெற்ற சந்திப்பில், எரிசக்தித் திறன், சுற்றுச் சூழலை பாதிக்காத எரிசக்தி ஆகிய வற்றை மேம்படுத்துவதற்கான இருதரப்பு முயற்சிகளை பலப்படுத்துவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசின் யோசனை சந்தேகத்திற்கிடமானது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் கொலையாளிகள் தொடர்பில் இந்திய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் நீதிமன்றத்தின் சுதந்திரத்தையும் இலங்கை அரசாங்கம் மதிப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆனால் தமிழக அரசாங்கம் கொண்டு வந்த தீர்மானம் தொடர்பில் சந்தேகத்தை வெளியிடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என குற்றம் சுமத்தப்பட்ட சகலரையும் விடுதலை செய்வதாக தமிழக அரசாங்கம் தீர்மானித்தது.

ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்ட இரண்டு குற்றவாளிகள் இலங்கையர்கள் என்றபோதிலும் அந்த கொலையானது பயங்கரவாத நடவடிக்கை என்பதால், அவர்களை விடுதலை செய்ய இலங்கை வெளிவிவகார அமைச்சு எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது.

ராஜீவ் காந்தியின் கொலையை இலங்கை அரசாங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. ராஜீவ் காந்தி இந்திய பொருளாதாரத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்த நபர்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்தில் இந்திய புலனாய்வுப் பிரிவினர் அந்த அமைப்புக்கு உதவியது போலவே அந்த அமைப்புக்கு எதிராகவும் செயற்பட்டனர் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி தம்பிராஜா பிள்ளையம்மா



ஊர்காவற்றுறை தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா பிள்ளையம்மா கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விராட்டிமுனை தம்பாட்டி நுணிபுரம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கந்தையா குழந்தைவேலு



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மெல்போன்னை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குழந்தைவேலு கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமைமுற்பகல் 10 மணிக்கு அல்ரோனா மயானத்தில் (மெல்போன்) நடைபெறும்.

### திருமதி சங்கரன் மீனாட்சி



நவபுரம் கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட சங்கரன் மீனாட்சி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### செல்லையா தங்கவடிவேல்



கரவெட்டி கரணவாய் வடக்கு ஊரியானைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு Goldsmith Lane ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தங்கவடிவேல் கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கல்வியங்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

# யாழ்.நகர் ஆட்டோ சாரதிகள் நேற்று பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் சேவையில் ஈடுபட்டுவந்த ஆட்டோ சாரதிகள் முன்னறிவித்தல்கள் எதுவுமின்றி திடீரென பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

ஆட்டோ சாரதிகள் சுமார் 600 பேர்வரை நேற்றுக்காலை 8 மணி முதல் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி போராட்டம் குறித்து முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் ஆட்டோக்கஎன் சாதனங்களை ஒழுங்கமைத்து பொதுமக்கள், பயணிகள் மற்றும் போக்குவரத்து சாதனங்களுக்கும் இடையூறு விளைவிக்காமல் சேவையை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் ஒருசிலர் இந்த ஒழுங்கு முறைக்கு மாறாக செயற்படுகின்றனர்.



எனவே அதனை ஒழுங்குபடுத்துமாறு கோரி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்தனர்.

இதேவேளை மேற்படிச்சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கையைக் கோரி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்ப்பாணம் போக்கு வரத்து பொலிஸாரிடமும், யாழ்.பாதுகாப்பு மக்கள் தொடர்பு பணியகத்திலும் மகஜர் ஒன்றை கையளித்ததாக ஆட்டோ உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அந்த மகஜரில், யாழ்.சத்திர சந்தியில் ஆட்டோ தரிப்பிடத்தில் எமது சங்கத்தினால் வழங்கப்பட்ட தரிப்பிட அனுமதியில் சேவையில் ஈடுபட்ட ஆட்டோ உரிமையாளர் ஒருவர் கடந்த சில வாரங்களுக்கு மேலாக தரிப்பிட கட்டுப்பாட்டை மீறி ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களைக் கூறி யாழ்.மின்சார நிலைய வீதியில் தமது உறவினர் ஒருவரின் வர்த்தக நிலையத்திற்கு முன்பாக தனது ஆட்டோவை வைத்து அத்துமீறி சேவையில் ஈடுபடுத்திவருகிறார்.

அவருக்கு நாம் அவ்வாறு செயற்பட வேண்டாம் என பல தடவை அறிவுறுத்தியும் எம்மை அச்சுறுத்துவது போல் செயற்படுகின்றார். எனவே இவருடைய செயற்பாட்டை கட்டுப்படுத்தி உதவவும்.

இதேவேளை யாழ். பஜார் வீதியில் மலாயன் கபே பகுதியில் ஆட்டோ சாரதிகள் எவ்வித அனுமதியுமின்றி சேவையில் ஈடுபடுகின்றனர் . இவர்கள் பயணிகளிடம் கட்டுப்பாடற்ற முறையில் அதிக பணம் அறவிடுவதும் பயணிகளின் பொதிகளுக்கு பாதுகாப்பற்ற வித்மாக செயற்படுவதும் சீராக சேவையில் ஈடுபடும் சாரதிகளுக்கும் இடையூறாகவுள்ளது. எனவே இவர்களுக்கும் 'ஒழுங்கு நடவடிக்கை மேற் கொண்டு அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# கண்காட்சியின் பாதுகாப்புக்கு 6 ஆயிரம் பொலிஸார் கடமையில்

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் பாதுகாப்பு பணிகளுக்காக 6 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குளியாப்பிட்டியவில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த கண்காட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதில் ஆயிரம் உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு விசேட அதிரடிப்படையினரும், முப்படையினரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

சிறுவர்களை அழைத்துச் செல்லும் பெற்றோர் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டுமெனவும் பொலிஸார் கோரியுள்ளனர். (அ-2)

# கலாசார சீரழிவுகளைத்தடுக்க சமய விழுமியங்கள் உதவும்

## வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன்

அறநெறிப் பாடசாலைகளின் மூலம் தான் எங்களுடைய சமயம் வளர்ச்சி கண்டு வருகின்றது என்றும் அறநெறிப் பாடசாலைகள் ஊடாக எங்களுடைய பிள்ளைகளை சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதன் மூலம்தான் சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்றும் வடமாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நரசிங்க வைரவர் அறிநெறிப்பாடசாலையும் இணைந்து நடத்திய பரிசளிப்பு விழா யாழ்.புன்னாலைக் கட்டுவன் வடக்கு திடற் புலத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அறநெறிப் பாடசாலைகளின் மூலம் தான் எங்களுடைய சமயம் வளர்ச்சி கண்டு வருகின்றது என்றும் அறநெறிப் பாடசாலைகள் ஊடாக எங்களுடைய பிள்ளைகளை சிறந்த பிரஜைகளாக உருவாக்குவதன் மூலம்தான் சமுதாயத்தையும் கட்டியெழுப்பமுடியும்.

இன்றைக்கு முக்கியமாக யாழ்ப்பாணத்தில் மிகவும் கலாசார சீரழிவு மலிந்து காணப்படுகின்ற நிலையில், இந்த சிறார்களுக்கு சிறு வயது முதலே சமய விழுமியங்களை கற்பிப்பதன் மூலம் அறநெறிப் பாடசாலைகள் மிகப் பெரியதொரு சேவையினைச் செய்து வருகின்றன.

எனவே இந் நடவடிக்கைக்கு அனைவரும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக உடுவில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்பனா சுதர்சன், கௌரவ விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் ஞ.குணரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர் ஜெயப் பிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும்

## முத்தையா முரளிதரன்

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகளை அறிந்து உதவ வேண்டும். அப்போதே ஒற்றுமையினால் நிறைந்த இலங்கை தேசியத்தை கட்டியெழுப்ப முடியும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பல்வகைமை மற்றும் சமத்துவத்தினால் அலங்கரிக்கப்பட்ட இலங்கை தேசியத்தை கட்டி யெழுப்புவதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக்கான மாநாடு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.


இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே முத்தையா முரளிதரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

முரண்பாடுகளினால் நானும் பாதிக்கப்பட்டேன். ஆனால் அவற்றை தற்போது கூற முடியாது. நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள் என இருபாலாரும் தவறுகளை செய்துள்ளனர். அவற்றை தற்போது கதைப்பதால் எவ்வித பயனும் இல்லை.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை தேவைகள் நிறைவேறவில்லை. இவர்களுக்கு சிறப்பான வாழ்க்கை, உணவு மற்றும் கல்வி என பல அடிப்படை தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அப்போதே ஒற்றுமையினால் நிறைந்த இலங்கை தேசியத்தை கட்டியெழுப்ப முடியும்.

அரசாங்கம் மக்களுக்கு பல நன்மைகளை செய்து வருகின்றது. ஆனால் அரசாங்கத்தால் மாத்திரம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

தனியார் நிறுவனங்கள் மற்றும் இசை கலைஞர்கள் எம்மை போன்ற விளையாட்டு வீரர்கள் என பலராலும மக்களின் தேவைகளை நிறை வேற்றுவதோடு சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும் என்றார். (அ-2)



# போர்க் குற்ற விசாரணைக்கு இந்தியாவும் ஆதரவளிக்கும்

**த டெலிகிராப் தகவல்**

(கொழும்பு)

இலங்கையில் இறுதிப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள முனையும் சர்வதேச நாடுகளின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்குமென த டெலிகிராப் செய்தித்தாள் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த அரசாங்கத்தின் தரப்பை கோடிட்டு இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்தத் தீர்மானம் பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சிறந்த ஊக்கத்தை வழங்கும்.

அதேநேரம் இவ்விடயம் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பின்னடைவை ஏற்படுத்துவதுடன் இலங்கையுடனான உறவிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவின் இந்தத் தீர்மானம் இலங்கையின் உறவைக் காட்டிலும் எதிர்வரும் பொதுத்தேர்தலை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டது என்று இந்திய தரப்புக்களை கோடிட்டு டெலிகிராப் குறிப்பிட்டுள்ளது: (அ-2)

## ஆவணங்கள் வழங்குவதற்கான நடமாடும் சேவை இன்று

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டுள்ள மக்களில் இது வரை தமது பிறப்பு, இறப்பு பதிவுகளுக்குட்படுத்தாது இருப்பவர்களும் இப்பதிவுகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்பவர்களும் பிறப்புச் சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொள்ள விரும்புவர்களும் தேசிய அடையாள அட்டைக்குமான நடமாடும் சேவையொன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சர்வோதய நீதிச்சேவை இயக்கத்தின் அனுசரணையுடன் முற்றிலும் இலவச சேவையாக வழங்கப்படவுள்ள இந் நடமாடும் சேவையில் பங்கு பற்றி ஆவணத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு யாழ். பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (அ)

# கமலுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் வரை விளக்கமறியல்

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரனை அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்சியன் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் இவர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் 26 ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் அவரது வீட்டில் இருந்து சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். மேற்படி கொலைச் சம்பவத்தையடுத்து பிரதானமாக குற்றம் சாட்டப்பட்ட வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் கைது செய்யப்பட்டார். இதேவேளை றெக்சியனின்மனைவியும் ஆட்டோ சாரதி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வழக்கு எடுக்கப்பட்டதோடு கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-6)


# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்துக்களும்

## யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்

## தம்பையா சண்முகசுந்தரமூர்த்தி (அதிபர் SLPS-I)

### ஆசியுரை

பாடசாலையில் கடந்த மூன்று வருடங்களாக அதிபராக சேவையாற்றி 22.02. 2014 இல் அறுபதாவது அகவையை சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வரும் அதிபர் திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி அவர்கள் 21.02.2014 இல் சேவையிலிருந்து ஓய்வு நிலை பெறுகின்றார். இப்பெரியார் அவர்கள் அவர்களது சேவைக் காலத்தில் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு மாணவர்களை முன்னிலைப்படுத்தியுள்ளார்.

இவர் சக ஆசிரியர்களுடனும் இதமாகப் பழகி அன்பையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். அதுமட்டு மல்லாமல் மாணவர்களுடைய நலன்களுக்கும் பெற்றோர்களின் அனுசரணையும் பெற்று பாடசாலையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் சேவை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தமது ஓய்வுக் காலங்களில் குடும்ப சமேதராக சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல அம்பிகையை பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் தோன்றாமை நன்று*

ச.மகேஸ்வரக்குருக்கள்

### வாழ்த்துரை

திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி ஓய்வுபெற்ற அதிபர் அவர்களின் சேவையை பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைத்து மாணவர்கள்,ஆசிரியர்களது விருப்பிற்குரிய ஒரு சிறந்த அதிபராக விளங்கியவர் திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி. அவருடைய நிர்வாக ஒழுங்கமைப்பும் ஆளுமையும் பாடசாலைச் சமூகத்தை கவர்ந்தன. சிறந்த முகாமைத்திறனும் செயற்றிறனும் மிக்கவர். மாணவர்களுடைய கல்வியிலே மிக அக்கறையுடன் செயற்பட்டவர்.

அவருடைய மகத்தான சேவையை கௌரவிக்கின்றேன். அவருடைய வாழ்க்கைக்காலம் சிறப்பாக அமையவும் சமூகப்பணிகள் மேலும் சிறக்கவும் தனது குடும்பத்தினரோடு இனிமையாகத் தமது வாழ்க்கைக் காலத்தைக் கழித்து மகிழ்வுடன் வாழ வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைவதோடு இறையருள் கிடைக்க வேண்டி என்றும் பிரார்த்திக்கின்றேன்.

தி.கிருபாகரன், உப அதிபர்.



### அதிபரின் சேவை விபரம்

**தம்பையா சண்முகசுந்தரமூர்த்தி (அதிபர் SLPS-I)**

கிளி/ பரந்தன் G.T.M.S. 02.01.1979-07.02.1979 ஆசிரியர்
கிளி/ கிளாலி R.C.T.M.S 08.02.1979- 31.12.1982 ஆசிரியர்
யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.01.1983- 31.12.1984 ஆசிரியர்
இ/ இரத்தினபுரி த.ம.வி 01.01.1985-23.04.1989 ஆசிரியர்
கிளி/ கிளாலி R.C.T.M.S 24.04.1989-17.01.1995 உப அதிபர்
கிளி/ கோவில்வயல் சி.சி.த.க.பா. 18.01.1995-28.09.1998 அதிபர்
யா/ இணுவில் இந்துக் கல்லூரி 29.09.1998-28.02.2002 பிரதி அதிபர்
யா/ சுதுமலை வடக்கு த.க.வி. 01.03.2002-22.02.2011 அதிபர்
யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் 23.02.2011-21.02.2014 அதிபர்

(5654)

### வாழ்த்துச் செய்தி

எமது வித்தியாலய அதிபர் திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி அவர்கள் இன்றுடன் பணி நிலை ஓய்வுபெறுகின்றார். கடந்த மூன்று வருடங்களாக பாடசாலையை சிறந்த முகாமைத்துவ கட்டமைப்புடன் நிர்வகித்த பெருமைக்குரியவர் எமது அதிபர். பாடசாலைச் சமூகத்தை தன் குடும்பமாக கருதி தன்னலம் பாராது அயராது உழைத்தார்.

ஆசிரியர் குழாமை அறிவார்ந்த முறையிலும் கட்டுக்கோப்புடனும் வழி நடத்தி கற்பித்தற் செயற்பாடுகளையும் இணைபாடவிதான செயற்பாடுகளையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று மாணவர் சகல துறைகளிலும் மேம்பட வேண்டும் என அரும்பாடுபட்டார். அதிபர் எனும் தற்பெருமையின்றி ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் பழகி அவர்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டு நலலதிபராக விளங்கினார்.

மாணவர் நலனோம்பு விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பட்டு மாணவர்கள் உடல், உள ஆரோக்கியத்தில் மேம்பட அரும்பாடுபட்டார். அவர் தம் ஓய்வுகாலத்தை தன் குடும்பத்தாருடன் மிகவும் மகிழ்ச்சிகரமாக கழித்திடவும் உடல், உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்திடவும் இறை ஆசி வேண்டி ஆசிரியர் நலன்புரிக்கழகம் மனதார வாழ்த்தி நிற்கின்றது.

[illegible] தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்.

### ஆசிச் செய்தி

யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய அதிபர் திரு. த. சண்முகசுந்தரமூர்த்தி அவர்கள் மணிவிழாக் காண்பதனையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனது வாழ்விலே ஆசிரியராக, அதிபராக நல்ல வழிகாட்டியாகப் பல பரிமாணங்களிலே மாணவ சமுதாயத்துக்கும் கல்விச் சமூகத்துக்கும் பல சேவைகளைச் செய்தவர். கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் மாணவர்களை வழிப்படுத்தி சிறந்த ஒரு வழிகாட்டியாக இருந்தவர்.

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் அதிபராகத் தனது கடமைகளைசெம்மையாகச் செய்த திருப்தியுடன் தனது அறுபதாவது வயதிலே இளைப்பாறும் திரு. த. சண்முகசுந்தரமூர்த்தி அவர்கள் தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்வுடன் சகல வளங்களையும் பெற்று நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*செ.சந்திரராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்*

### வாழ்த்துச்செய்தி

யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய அதிபர் திரு.த. சண்முகசுந்தரமூர்த்தி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். கடந்த மூன்று வருடங்களாக மேற்படி வித்தியாலய அதிபராக கடமையாற்றிய திரு.த.சண்முகசுந்தரமூர்த்தி அவர்கள் எமது கோட்டத்துடன் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக தனது அதிபர் சேவையை ஆற்றி மாணவ சமூகத்தின் கல்வி மேம்பாட்டிற்காக பாடுபட்டவர்.

தமிழ்த்தினப்போட்டியை கோட்டமட்டத்தில் திறம்பட நடாத்தி சண்டிலிப்பாய் கோட்ட மாணவரின் திறன்களை வெளிக்கொணர்வதற்கு முன்னின்று உழைத்தவர் எனலாம்.

22.02.2014 தனது 60 ஆவது அகவை எட்டும் திரு.த. சண்முகசுந்தரமூர்த்தி அவர்களின் ஓய்வுக்காலம் ஆரோக்கியமாக அமைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன். கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரின் ஆலோசனைகளும் வழிப்படுத்தல்களும் கல்விச் சேவைக்கு கிடைக்கவேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன்.

*திரு. ச.சிவானந்தராஜா, கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்கள் முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதில்லை.

- சர்ச்சில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜெயலலிதா இந்தியப் பிரதமராக- கலைஞர் காலன் வயப்பட்டால்...?

கலைஞர் கருணாநிதி தன்னைத் தவிர வேறு எவருக்கும் விசுவாசமானவர் அல்ல. இதை நாம் கூறும்போது கலைஞரின் ஆதரவாளர்கள் மனக் கஷ்டம் கொள்ளலாம்.

ஆயினும் உண்மை அதுதான். இதற்குப் பல உதாரணங்களைக் கூறமுடியும். கலைஞர் கருணாநிதி தன் மனைவிக்கு விசுவாசமாக நடந்திருந்தால், இரண்டு துணைவியரைத் தேடியிருக்க மாட்டார்.

பெற்ற பிள்ளைக்கு விசுவாசம் என்றால், அழிகிரியை ஓரம்கட்ட நினைத்திருக்க முடியாது.

தன் மருமகன் முரசொலிமாறனுக்கு விசுவாசம் என்றால் தயாநிதி மாறனை மடக்கியிருக்கார்.

இவையெல்லாம் உறவுகள் என்று நீங்கள் கூறினால், நண்பர்களுக்கு மட்டும் அவர் விசுவாசமா என்ன? எம்.ஜி.ஆரை கட்சியில் இருந்து வெளியேற்றியது முதல்; நாவலர் நெடுஞ்செழியனுக்கு முதலமைச்சர் பதவி கிடைக்காமல் தடுத்தது - கூட இருந்து எல்லாவற்றுக்கும் ஆமாப் போடும் பேராசிரியர் அன்பழகனுக்கு முதல்வர் பதவியை ஒருவருடத்துக்கேனும் கொடுக்க முடியாததுவரை கலைஞர் கருணாநிதி சுயநலத்திலேயே தன்வாழ்வு முழுவதையும் கடத்தியுள்ளார்.

அட! கலைஞர் கருணாநிதிக்கு தமிழ் இனம் என்றால் உயிர் என்ற மாயையும் ஈழத்தமிழர்களின் வன்னி வதையின்போது அறுந்து போயிற்று.

ஆக, ஒட்டுமொத்தத்தில் கருணாநிதியின் கபடத்தனம் அனைத்தும் அம்பலமாகிப் போகும் அளவில் ராஜிவ் காந்தியின் கொலைக் குற்றச்சாட்டில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தும் அதனைச் செய்ய முடியாதபோது சர்வமும் சுயநலம் என்பதாக கலைஞரின் சுயரூபம் அறியப்பட்டது.

இப்போது தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு குருச் சந்திரயோகம்.

ராஜிவ் காந்தியின் கொலைக் குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தண்டனையை நீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்துவிட,

அவர்களைத் தாம் விடுதலை செய்வதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

ஜெயலலிதாவின் அறிவிப்பு அவரை இந்திய தேசத்தின் பிரதமராக ஆக்கும் அளவில் அவரின் செல்வாக்கை இமாலயத்திற்கு உயர்த்தி உள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியை கொலை செய்ததுடன் தொடர்புபட்டவர்கள் என நீதிமன்றம் நிரூபணம் செய்த கைதிகளுக்கு விடுதலை என்று அறிவித்த ஒருவர், இந்தியாவின் பிரதமராகும் வாய்ப்பிற்கு ஆளாகிறார் எனில், இதனை எப்படிக் கூறுவது!

சுருங்கச் சென்னால், எங்கள் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கூறிய கர்மவினைக் கோட்பாட்டை மட்டுமே இப்போதைக்கு முன்னிலைப்படுத்த முடிகின்றது.

இவையெல்லாம் ஒரு புறம் இருக்க, செல்வி ஜெயலலிதா இந்தியாவின் பிரதமராக பதவி வகிக்க,

கலைஞர் கருணாநிதி எல்லாம் இழந்து காலன் வயப்பட்டால்... நிலைமை எப்படி இருக்கும் என்று ஒரு கற்பனை செய்து பார்த்தபோது,

சீ... ஒரு தலைவனுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்படக்கூடாது என்று மனம் சென்னது.

கூடவே எங்களுக்காக கலைஞர் நடித்த உண்ணாவிரத நாடகத்தின் ஞாபகமும் இடையிடையே தோன்றி மறைகிறது.

கொடுக்கிற கடவுள் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுப்பான் என்பதற்கு ராஜிவ் காந்தியின் கொலைக் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டவர்களுக்கு கிடைத்த தீர்ப்பு செல்வி ஜெயலலிதாவின் முதல்வர் காலத்தில் வந்து சேர்ந்து தமிழர்களின் உள்ளம் எல்லாம் "ஜெ" என்பதாக மாற்றிய விதியைத் தான் கூற முடியும்.

# தனக்கான கல்லறையை நிர்மாணிக்கிறார் மேர்வின்

(கொழும்பு)

கொழும்பு பொரளையில் உள்ள மயானத்தில் பிரபல சிங்கள பாடகர் எச்.ஆர்.ஜோதிபாலவின் கல்லறைக்கு அருகில் தனக்கான கல்லறை நிர்மாணிக்க காணியை கொள்வனவு செய்துள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனி விஷ்ணு ஆலய வளாகத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொரளை கனத்தை மயானத்தில் ஜோதிபாலவின் கல்லறைக்கு அருகில் புதைகுழிக்கான காணியை வாங்கியுள்ளேன். பணத்தை செலுத்திவிட்டேன்.

இன்னும் இரண்டு வாரங்களில் கல்லறையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை நாட்டுவேன். இதில் கலந்து கொள்ள அனைவருக்கும் அழைப்பு விடுப்பேன்.

இலங்கையில் விஷ்ணு ஆலயம் ஒன்றை நிர்மாணித்தால் போர் முடிவுக்கு வரும் என இந்தியாவில் உள்ள பிரபல சோதிடர் மூலம் அறிந்து கொண்டேன்.

அப்படியான ஆலயம் ஒன்றை காண ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் புண்ணியம் கிடைத்தது. அந்த ஆலயத்தை நிர்மாணிக்கும் பலமும், சக்தியும், அதிஷ்டமும் எனக்கு கிடைத்தது. ஆலயத்தை நிர்மாணிப்பதால் எனக்கு பிரச்சினைகள் ஏற்படும் என்றும் அந்த சோதிடர் கூறியிருந்தார்.

ஆலயத்தை கட்டி முடித்தேன் யுத்தம் முடிவுக்கு வந்தது. எனக்கு பிரச்சினைகள் ஏற்பட்டன. இந்தியாவில் நான் பார்த்த மற்றுமொரு சோதிடர் நான் ஏழு ஜென்மங்களை எடுத்து விட்டதாகவும் மீண்டும் பிறக்க வேண்டுமாயின் புத்தர் மீண்டும் பிறக்கும் போதே அந்த சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் கூறினார்.

ஏழு முறை நான் பிறந்து விட்டதால், இனி எனக்கு மறு பிறவி இல்லை. இதனால் பொரளை கனத்தையில் எனக்கு கல்லறையை நிர்மாணிக்க காணியை கொள்வனவு செய்தேன். நிர்மாணிக்க போகும் கல்லறையில் நான் எப்போது பிறந்தேன் என்பதை குறிப்பிடமாட்டேன்.

நான் சோதிடம் பார்க்க இந்தியாவுக்கு சென்றிருந்தபோது என்னுடன் சில நண்பர்களும் வந்திருந்தனர். அவர்கள் இதற்கு சாட்சி கூறுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து முச்சக்கர வண்டி உரிமையாளர்களையும் சாரதிகளையும் தவறாது சமூகம் அளிக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-9-271)

## மெய்வல்லுநர் போட்டி

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ல.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன், சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், கௌரவ விருந்தினராக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவி மாவட்ட ஆணையாளர் சோ.ஈழநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## சி.க.கூ.சங்க பொதுக்கூட்டம்

க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் நால்வருக்கு ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவு கூட்டுறவு சங்கத்தினரால் ஊக்கு விப்பு அன்பளிப்பு வழங்கப்படும் என சங்கத் தின் செயலாளர் திருமதி பிரதீபா விஜிதரன் அறிவித்துள்ளார். (அ-2)

## யோகா பயிற்சியும் மருத்துவ முகாமும்

யாழ்.யோக அரங்கத்தினர் நடத்தும் யோகா பயிற்சியும் மருத்துவப் பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நல்லூர் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் ஆரம்பமாகின்றது.

யோகா பயிற்சியை காலை 6 மணி தொடக்கம் 7.30 மணிவரை கொழும்பிலிருந்து வருகை தந்த பெண் ஆசிரியர் வழங்குவார். மருத்துவர் என். ஸ்ரீதேவா காலை 8 மணியிலிருந்து மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வார்.

மாலைநேர யோகாசன வகுப்புக்களுக்கான பதிவுகளும் இடம்பெறும். தேவையுடைய அனைவரும் இணைந்து பயன் பெறலாம் என்று யோக அரங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ-2)

# 576 ஏக்கர் கடற்பரப்பு; அரசு சீனாவுக்கு விற்பனை

**ஐ.தே.க.குற்றச்சாட்டு**

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள 576 ஏக்கர் கடல் பரப்பை இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு விற்பனை செய்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா சுமத்தியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த செயற்பாடு உலக வங்கியின் திட்டத்தை புறக்கணித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

சீனாவின் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றுக்கு இந்த கடல் பரப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சீன நிறுவனத்தின் திட்ட மதிப்பீடு ஆயிரத்து 377 மில்லியன் டொலர்களாகும். கடல்பரப்பை நிரப்பிய நிலையில் பேர்ச் ஒன்று 1.8 மில்லியன் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

எனினும் அமைச்சரவை பத்திரத்தில் இந்த பேர்ச் ஒன்று 8 மில்லியன் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சீன நிறுவனமே அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளையும் மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**மனத்திலிருந்து விடுதலை**

இது மனமே இல்லாத நிலையல்ல. மனம் என்பது நம்பிக்கைகள், நோக்கங்கள், சிந்தனைகள், சமுதாயக் கட்டுப்பாடுகள், பாதிப்புக்கள் பிள்ளைப்பிராய முடிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த மனதே நமது விருப்புக்களுக்கு உட்படாது நமது வாழ்வைக் கட்டுப்படுத்துகிறது. ஆகவே நாம் முடிவையும் எடுக்க முடியவில்லை; இந்த மனதின் வட்டத்திற்கு வெளியில் எதையும் சிந்திக்கமுடியவில்லை. ஆகவே நாம் நமது சொந்தச் சிறையிலேயே அடைபட்டு விடுகிறோம். மனதிலிருந்து விடுதலை என்றால் மேலே கூறப்பட்டவைகளின் கட்டுப்பாட்டில் இனியும் நாம் இல்லை; மாறாக நாமே அவற்றைக் கட்டுப்படுத்துகிறோம். இந்த விடுதலை மிகப்பெரியதொரு சுதந்திரத்திற்கு இட்டுச் செல்லும். எடுத்துக்காட்டாக நமது நண்பர்களிடத்தில், உறவினர்களிடத்தில், மனைவியிடத்தில் நாம் ஏன் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறோம் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. நமது நடத்தை நமது கட்டுப்பாட்டிற்குள் இல்லை. நாம் இயலாத நிலையில் உள்ளோம். நமது இத்தகைய நடத்தைகளைப் பற்றிய நமது இயலாத உணர்விற்கான பல்வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. இவையாவும் நமது கட்டுப்பாடற்ற மனதினால் ஏற்பட்டவையே. மனதின் பிடியிலிருந்து நீங்கள் விடுதலையடைந்த உடனேயே உங்களது மகிழ்ச்சி வேறு விதமானதொரு பண்பைக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பொறுமைக்குப் பெரிய பரிசு



- நம்பிக்கையும் நேர்மையும் பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்து செயலும் முன்னேற்றமடையும். இறை வன் அருளால் அபாயம் எதுவும் ஏற்படாது.
- பூமி மாதாவை போன்று அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக் கொள்ள தயாராக இருந்தால், உலகமே உங்கள் காலடியில் அமரும்.
- நன்மைகளைப் பெற வேண்டுமானால், வாழும் தெய்வமாகிய ஒவ்வொரு மனிதனையும் வழிபடுங்கள்.
- ஏழைக்கு உதவி செய்வது என்பது, கோயிலில் சிவனை கண்டு வணங்குபவனிடம் சிவன் அடையும் மகிழ்ச்சியை விட மேலானதாகும்.
- கடவுள் வரம்பு கடந்த பெருமைகளை உடையவர். அவரை வணங்கி துய்மையான மனதைப் பெறலாம்.
- இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவரையே எப்போதும் சார்ந்து நில்லுங்கள்.
- ்கையை இறைவன் படைத்தது கொடுப்பதற்கே. நீ பட்டினியாய்க் கிடக்க நேர்ந்தாலும், உன்னிடத்தில் ஒருவன் கேட்டால், கடைசிப் பருக்கையையும் கொடுத்துவிடு. அப்போது, நீ பூரணமடைவதுடன் தெய்வமாகவும் ஆவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் இளைஞர் கழக பெருவிளையாட்டுப்போட்டிகள்

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இருபாலாருக்குமான கபடிப்போட்டிகள், இருபாலாருக்குமான கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் சுன்னாகம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் காலை 8.30 முதல் உடுவில் மத்தி வி.க. மைதானத்திலும் சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் வி.க.மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (சு-23)

# சாவகச்சேரி இளைஞர் கழக பெருவிளையாட்டுப்போட்டிகள்

சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப்போட்டி, வலைப்பந்தாட்டம், கயிறிழுத்தல் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

எனவே பதிவு செய்த இளைஞர் கழகங்க்ள் இப்போட்டியில் உரிய நேரத்தில் வருகை தந்து பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (சு-23)

# சண்டிலிப்பாய் இளைஞர் கழக பெருவிளையாட்டுப்போட்டிகள்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டம் என்பவை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக்கிழமை மதியம் 1.30 முதல் இடம்பெறவுள்ளன.

இதேவேளை பெண்களுக்கான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை மைதானத்தில் இடம்பெற வுள்ளன.

ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணி முதல் ஆனைக்கோட்டை றோ.க.த. பாடசாலையில் இடம் பெறவுள்ளதாக வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்.(சு-23)

# கரவெட்டி இளைஞர் கழக பெருவிளையாட்டுப்போட்டிகள்

(மானிப்பாய்)

கரவெட்டி இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன்படி இன்று சனிக்கிழமை ஆண், பெண் இருபாலாருக்குமான வலைப்பந்து போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் தவிர்க்கமுடியாத காரணங்களால் இப்போட்டிகள் அல்வாய் மனோகரா மைதானத்தில் காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளதாக பிரதேச இளைஞர்சேவை உத்தியோகத்தர் வ.மனோராஜ் கேட்டுள்ளார்.

இதேவேளை ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

எனவே பதிவு பெற்ற அனைத்து இளைஞர் கழகங்களும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு போட்டிகளில் பங்குபற்றுமாறு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் வ.மனோராஜ் கேட்டுள்ளார். (சு-23)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி; சிவகுமரன் இளைஞர் கழகம் சம்பியன்




கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா அண்மையில் இமையாணன் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியில் 2:0 என்ற நேர் செற்களில் இமையாணன் இளைஞர் கழகத்தை வீழ்த்தி சிவகுமரன் இளைஞர் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது. (சு-23)

# தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்து; குறிஞ்சிக்குமரன், கல்வளை விநாயகர் வெற்றி

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன. போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் அணியும் மோதியது. இதில் 4:1 என்னும் கோல் அடிப்படையில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி வெற்றி பெற்றது.

இதன்மூலம் அரையிறுதிக்கு குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி தகுதி பெற்றது.

ஏனைய போட்டியில் சாவற்காடு மகாத்மா அணியும் கல்வளை விநாயகர் அணியும் மோதியது.

இதில் 1:1 என போட்டி சமநிலையில் நிறைவுபெற சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 4:1 என்னும் கோல் அடிப்படையில் கல்வளை விநாயகர் அணி வென்றது.

தொடர்ந்து அரையிறுதிப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இன்று இடம்பெறும் அரையிறுதியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியும் யூனியன்ஸ் வி.க. அணியும் யங்கென்றீஸ் அணியும் மோதும் போட்டியில் வெல்லும் அணியும் மோதவுள்ளது. (சு-23)

## அரச அதிபர் வெற்றிக் கிண்ணம்

2013 ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியின் சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறும் இடம் மற்றும் திகதி என்பன தொடர்பானது.

**சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண்கள்/ பெண்கள்)**

இன்று சனிக்கிழமை காலை 8 மணி

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்பாதை:- மாவட்டச் செயலக நுழைவாயிலிலிருந்து ஆரம்பித்து கச்சேரி நல்லூர் வீதி வழியாக சென்று சங்கிலியன் பூங்காவால் இடது பக்கம் திரும்பி செம்மணி வீதி வழியாக யாழ். வரவேற்பு சந்தியினை அடைந்து A9 வீதி வழியாக மாவட்டச் செயலகத்தினை வந்தடைதல்.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்பாதை :- மாவட்ட செயலக நுழைவாயிலிலிருந்து ஆரம்பித்து கச்சேரி நல்லூர் வீதி வழியாக சென்று முத்திரைச் சந்தியினை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக கோப்பாய் சந்தியினை அடைந்து வலது பக்கமாக கைதடி மானிப்பாய் வீதியினால் திரும்பி கைதடி சந்தியினை அடைந்து A9 வீதி வழியாக மாவட்ச் செயலகத்தினை வந்தடைதல்.(கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மின்னொளியிலான தாச்சி; ஆலடி சிந்து வெற்றி

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப்போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச்சுற்றுப்போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் தாவடி காளியம்பாள் அணியும் ஆலடி சிந்து அணியும் மோதின.

இதில் 7:4 பழங்கள் அடிப்படையில் ஆலடி சிந்து அணி வெற்றி பெற்றது.

இன்று இடம்பெறும் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் ஆலடி சிந்து மற்றும் புதுமடம் வைகறை அணியும் மோதும் போட்டியில் வெற்றி பெறும் அணியும் மோதவுள்ளன.

இதேவேளை இப்போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள் இன்றும் நாளையும் இறுதிப்போட்டிகள் இம்மாதம் 25 ஆம் திகதியும் இடம் பெறவுள்ளதாக தாச்சி சங்க தலைவர் அறிவித்துள்ளார். (சு-23)





யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வீதியோட்ட நிகழ்வை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வைத்திய கலாநிதி வே.கணேசவேல் ஆரம்பித்துவைப்பதையும் வெற்றியீட்டிய மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோனி, பயிற்சியாளர் பிளட்சரிடம் பி.சி.சி.ஐ விசாரணை நடத்த முடிவு




அநநிய மண்ணில் இந்திய அணியின் தோல்விக்கான காரணம் குறித்து கப்டன் தோனி, பயிற்சியாளர் பிளட்சரிடம் பி.சி.சி.ஐ நிர்வாகிகள் விசாரிக்க உள்ளனர்.

கடந்த 2011-ல் இந்திய அணிக்கு பயிற்சியாளர் ஆனார் சிம்பாப்வேயின் டஙகன் பிளட்சர். அன்று முதல் இன்று வரை அநநிய மண்ணில் தொடர்ந்து அடிதான் கிடைத்து வருகிறது. அதாவது இங்கிலாந்துடன் 0-4, அவுஸ்திரேலியாவுடன் 0-4 என, டெஸ்ட் தொடரை இழந்த இந்திய அணி, தென்னாபிரிக்கா (0-1) மற்றும் பலம் குறைந்த நியூசிலாந்திலும் (0-1) கோட்டை விட்டு திரும்பியது.

இதனால், டெஸ்ட் கப்டன் பதவியில் இருந்து தோனி, பயிற்சியாளர் பிளட்சர் என, இருவரையம் நீக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் அநநிய மண்ணில் இந்திய அணி சந்தித்த தொடர் தோல்விகள் குறித்து இருவரிடமும் விசாரிக்கவுள்ளதாக தெரிகிறது. தவிர, வரும் 28-ம் திகதி புவனேஸ்வரில் நடக்க உள்ள பிசிசிஐ செயற்குழு கூட்டத்திலும இப்பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) நிர்வாகத்தை சேர்ந்த ஒருவர் கூறுகையில், " அணியின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்ய நர்ங்கள் விரும்புகிறோம். ஏனெனில், எங்கு தவறு நடக்கிறது என்பதை அறிந்து, இதைச் சரிசெய்ய என்ன தேவை என்று முடிவு செய்ய வேண்டும்," என்றார்.

பயிற்சியாளர்களின் மந்தமான செயல்பாடு குறித்து முன்னாள் கப்டன் கங்குலி கூறியது,

எங்கள் எதிர்பார்ப்பு எல்லாம் வீணாகிவிட்டது. தோனிக்கு இப்போது உதவி தேவைப்படுகிறது. பயிற்சியாளர் பிளட்சர், என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றே தெரியவில்லை. இவர் தோனிக்கு உதவி செய்ய வேண்டும். தேர்வாளர்கள் இதைக் கண்காணித்து சரியான அணியை தேர்வு செய்ய வேண்டும்.

பவுலிங்பயிற்சியாளர் ஜோ டேவ்ஸ் முழுமையாக செயல்படவில்லை. தென்னாபிரிக்காவின் அலன் டொனால்டை எடுத்துக் கொண்டால், மைதானத்தின் பவுண்டரி எல்லைக் கோட்டுக்கு அருகேதான் காணப்படுவார். அவ்வப்போது பவுலர்களுக்கு ஆலோசனை கொடுப்பார். இப்படியெல்லாம் ஜோ டேவ்ஸ் செய்து பார்த்ததே இல்லை. இவ்வாறு கங்குலி கூறினார்.

கடந்த 2011 முதல் இந்திய அணிக்கு பயிற்சியாளராக உள்ள பிளட்சரின் பதவிக் காலம் வரும் மார்ச் மாதத்துடன் முடிகிறது. அடுத்த ஆண்டு உலக கோப்பை தொடர் நடக்கவுள்ள நிலையில், ஏப்., 1 முதல் இவரது பதவி நீட்டிக்கப்படும் எனத் தெரிகிறது.

இதனிடையே, சமீபத்தில் இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்ட பயிற்சியாளர் அன்டி பிளவரை, பி.சி.சி.ஜ சார்பில் தொடர்பு கொண்டதாக நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகின. இதை மறுத்த பி.சி.சி.ஐ செயலர் சுஞ்சய் படேல் கூறுகையில், "அன்டி பிளவருடன் பேசியதாக வெளிவந்த செய்திகள் முட்டாள்தனமானது. அப்படி எதுவும் நடக்கவில்லை," என்றார். (க)

## குற்றவாளிகள்...

கள் கலந்துகொண்டனர்.

அப்போது ராஜிவ் காந்தியுடன் குண்டு வெடிப்பில் பலியான சம்தானி பேகத்தின் மகன் அப்பாஸ் கருத்து வெளியிடுகையில்,

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி, 1991-ம் ஆண்டு கொல்லப்பட்டபோது என்னுடைய தாயாரும் அங்கு சென்றிருந்தார். அப்போது ஏற்பட்ட குண்டுவெடிப்பில் என் தாயார் [illegible]ல் சிதறி பலியானார். ஏற்கெனவே தந்தையை இழந்து தவித்த நான் எனது 10 வயதில் தாயாரையும் பறிகொடுத்தேன்.

இந்நிலையில் எனது தாயாரை கொலை செய்தவர்களை விடுதலை செய்வது எப்படி நியாயமாகும். குற்றவாளிகள் 23 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளதே பெரிய தண்டனை என்று சிலர் கூறுகின்றனர். நான் கூட வாழ்நாள் முழுக்க எனது தாயாரை இழந்து தவிக்கிறேன், இதற்கு அவர்களால் பதில் சொல்ல முடியுமா என்று கூறினார்.

தொடர்ந்து, குண்டு வெடிப்பில் பலியான சிபிசிஐடி அதிகாரி எட்வர்ட் ஜோசப்பின் தம்பி ஜான் கூறுகையில்,

எனது அண்ணன் நாட்டிற்காக உயிரை விட்டுள்ளார். அவரது மரணத்திற்கு காரணமானவர்களை விடுதலை செயவது தவறான முன்னுதாரணமாகி விடும் என்றார்.

குண்டுவெடிப்பில் பலியான முனுசாமி என்பவரின் மகன் மோகன் கூறுகையில்,

கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்வது அரசியல் ஆதாயத்திற்கான செயலாகும். இதற்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. மேலும் இந்த வழக்கில் மார்ச் 6-ம் திகதி வரவுள்ள தீர்ப்பினை பொறுத்து, குண்டுவெடிப்பில் பலியானோர் குடும்பத்தின் சார்பில் பதில் மனு செய்வோம் என்றார். (எ-11)

## ஜெயலலிதாவின்...

றும் ஜெயலலிதா அறிவித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லியில் டெல்லி- தமிழ்நாடு இலலததை நோக்கி 300க்கும் மேற்பட்ட காங்கிரஸ் தொண்டர்கள் முற்றுகையிட சென்றனர்.

அவர்களை தடுத்து நிறுத்தி பொலிஸார் கைது செய்தனர். அதன் அருகிலேயே சில காங்கிரசார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா உருவபொம்மையை எரித்தனர்.

இந்த நிலையில் தமிழக அரசின் இந்த முடிவு பற்றி டெல்லி முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால். இது நடக்கக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம். நாம் இது போன்றவர்களை விடுதலை செய்தால், தவறான தகவலை அனுப்புவதாக அமையும் என்று கருத்து தெரிவித்துள்ளார். (எ-11)

## மழை...

தோட்டை, பொத்துவில் ஊடாக காலி முதல் திருகோணமலைக்கு அப்பாலான கடல் பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை அவ்வப்போது பெய்யலாம்.

காற்று வட-கிழக்காக வீசலாமென்பதுடன், இது மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசலாம். காற்றின் வேகம் அதிகரித்து புத்தளம ஊடாக மன்னார் முதல் கொழும்பு கரையோரப் பகுதிக்கு அப்பாலான கடல் கணிசமாக கொந்தளிக்கக் கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, பொதுமக்களை பாதுகாப்பாக இருக்குமாறும் அத்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (எ-11)

## இந்தியப் படையினர்...

குறிப்பிட்டுள்ளதாக பிடிஐ குறிப்பிட்டுள்ளது.

எனினும் இலங்கையின் ஜனாதிபதி ஆணைக்குழு 1990-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2009-ம் ஆண்டு மே மாதம் வரையிலான முறைப்பாடுகளை மாத்திரமே ஏற்றுக்கொள்வதன் காரணமாக 1987-ம் ஆண்டு இலங்கைக்கு வந்து 1990 மார்ச்சில் இந்தியாவுக்கு திரும்பிய இந்திய படையினர் தொடர்பான முறைப்பாடுகள் செல்லுபடியாகாது என்றும் ஆணைக் குழு அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.


ஆரம்பத்தில் 40 பேரைக் கொண்ட இந்தியப் படையினர் பின்னர் 70ஆயிரமாக உயர்த்தப்பட்டனர். இந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்ற போரின் போது ஆயிரத்து 200 இந்தியப் படையினர் வரை கொல்லப்பட்டனர். (எ-11)

## மன்னார் புதைகுழி...

சாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. இதுவரையில் 69 மனித எலும்புக்கூடுகள் மற்றும் எச்சங்கள் மன்னார் பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.


மேலும், மேற்படி மனித புதைகுழியை விரிவுபடுத்தும் முகமாக அருகிலுள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மனித புதைகுழி 29ஆவது தடவையாக இன்று சனிக்கிழமையும் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் தோண்டப்படவுள்ளது. (எ-11)



வட மாகாண ஆளுநர் கிண்ண சதுரங்கப்போட்டியில் புங்குடுதீவு மேற்கு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர்கள் ஐவர் வலயமட்டப் போட்டியில் சம்பியன் வென்றுள்ளனர். சம்பியன் வென்ற மாணவர்களுடன் அதிபர் திருமதி யோ. விநாயகமூர்த்தி மற்றும் கோட்டமட்டபோட்டியில் சான்றிதழ் பெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# பங்களாதேஷை வீழ்த்தி தொடரை வென்றது இலங்கை



பங்களாதேஷ் அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டியில் சங்கக்காரவின் சதத்துடன் 61 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி டாக்காவில் இடம்பெற்றது.

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அவ் அணியுடனான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கிலும், இரண்டு போட்டிகள் கொண்ட இருபதுக்கு -20 தொடரை 2-0 என்ற கணக்கிலும் வெற்றி கொண்டுள்ள நிலையில், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது.

அந்தவகையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2-வது ஒருநாள் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 289 ஓட்டங்களை பெற்றது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய டில்சான் மற்றும் குசேல் ஜனித் பெரேரா ஆகியோர் தலா 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளிக்க அடுத்த களமிறங்கிய சங்கக்காரவுடன் சந்திமால் இணைந்தார்.

சங்கக்கார நிதானமாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்க சந்திமல் 9 ஓட்டங்களுடன் அரங்கு திரும்பினார்.

பின்னர் களத்தில் இருந்த சங்கக்காரவுடன் அசான் பிரியன்ஜன் கைகோர்த்தார். இருவரும் நான்காவது விக்கெட்டுக்காக துடுப்பெடுத்தாடி இணைப்பாட்டமாக 114 ஓட்டங்களை பெற்றிருந்த போது அரைச் சதத்தை கடந்த பிரியன்ஜன் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய அணித் தலைவர் மத்தியூஸ் அதிரடியாக துடுப்பெடுத்தாட மறு முனையில் இருந்த சங்கக்கார 102 பந்துகளில் 102 ஓட்டங்களை கடந்து ஒருநாள் அரங்கில் 17 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

சங்கக்கார 128 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க அதிரடியில் மிரட்டிய மத்தியூஸ் 39 பந்துகளில் 56 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார். பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய திசர பெரேரா போட்டியில் எவ்வித ஓட்டங்களும் பெறாது ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சில் ரூபெல் ஹுசைன் மூன்று விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்நிலையில் 290 ஓட்டங்கள் என்ற கடின வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் 43 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 61 ஓட்டங்களால் தோல்வியை தழுவியதோடு தொடரையும் பறிகொடுத்தது.

அணியின் துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் முஸ்பிகுர் ரஹீம் மாத்திரம் 79 ஓட்டங்களை அதிகூடுதலாக பெற ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சில் மலிங்க, சேனாநாயகக, திசர பெரேரா மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளை கைப்பற்றினர். துடுப்பாட்டத்தில் அசத்திய நட்சத்திர வீரர் குமார் சங்க்கார போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷிராணியின்...

டின் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் ஐந்து பேரடங்கிய குழு விசாரித்தது.

அதன்படி, ஏற்கெனவே மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் ரத்துசெய்தது.

நாடாளுமன்றத்துக்கு உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு மேன்முறையீட்டுநீதிமன்றத்துக்கு எந்தவிதமான அதிகாரங்களும் இலலை என்று உச்சநீதி மன்றம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டதரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு ரிட் கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் இலலை என்று அரசுதரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் ஸரூக் தெரிவித்தார்.

முன்னாள் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவிநீக்கம் செய்யப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்று சர்வதேச அமைப்புகள் கூறி வந்தாலும், அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மூலம உறுதியாகிவிட்டதாகவும ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் ஸரூக் கூறினார். (எ-11)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

EVENING & WEEKEND CLASSES STARTS ON
Batch I 22.02.2014 | Batch II 24.02.2014 | Batch III 01.03.2014 | Batch IV 03.03.2014

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
(C-6554)
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074



FLC FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் ஆரியகுளத்தடி, நெல்லியடியில் மட்டுமே..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்.......
ஆரம்பம்: 08.03.14 8.30am No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்தடி)
ஆரம்பம்: 11.03.14 at 11am No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456
(C-6556)



சல்லிக்கற்கள் விற்பனைக்குண்டு.
சரியான அளவை கொண்ட (3/4") கருங்கற்சல்லிக்கற்கள் குறைந்த விலையில் யாழ், வன்னி போன்ற பிரதேசங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்.

3 கியூப் 33,000/- (4 டிரக்டர் பெட்டி)
(C-6555)
0773818799
Branawan Enterprises
635, Pointpedro Road, Nallur, Jaffna




nation popular travels & tours
0773083820
வணக்கம்
உலகின் எப்பாகத்திற்கும் எந்த நேரத்திலும் எந்த இடத்திற்கும் செல்வதற்கான சர்வதேச விமானப்பயணப் பற்றுச்சீட்டுக்கள்

| | | |
|---|---|---|
| India இந்தியா | Qatar கட்டார் 25300/= | France பிரான்ஸ் 86500/= |
| Chennai சென்னை 18300/= | Italy இத்தாலி 87500/= | Germany ஜேர்மனி 87000/= |
| Madurai மதுரை 16000/= | Singapore சிங்கப்பூர் 30100/= | UK லண்டன் 70200/= |
| Tiruchirapalli திருச்சி 22000/= | Switzerland சுவிஸ் 119800/= | Canada கனடா 105000/= |
| Cochin கொச்சின் 21000/= | Malaysia மலேசியா 33800/= | NORWAY நோர்வே 88500/= |

(C-6558)
#16 1/2 E.S Fernando mawatta Colombo -06 Sri Lanka.
#128, Brown Road Jaffna.. www.nationtravels.com



முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டியின் பரிபூரண நிதியூட்டத்துடன் உதயமாகியது

துன்னாலை பிரதேச கல்வி, சமய அபிவிருத்தி மன்றம்



19.02.2014 அன்று மேற்படி பிரதேசத்தவர்களோடு இடம்பெற்ற கலந்தாய்வின் பின் மேற்படி நிறுவனம் எம்மால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்வோடு அறியத் தருகின்றோம்.
இதன் பிரதான இலக்கு மேற்படி பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகள், மத அமைப்புக்கள் என்பவற்றினை மேம்பாடடையச் செய்து அதன் மூலம் அப்பிரதேச வளர்ச்சிக்குக் கைகொடுத்தலாகும்.
இதன்பிரகாரம் முதற்கட்ட நடவடிக்கைகளாக இலவச அறநெறிப் பாடசாலையும் கணனி அறிவை மேம்படுத்த பாடசாலைக்குரிய தகவல் தொழில்நுட்பக்கூடம் அமைக்கப்படல் என்பனவாகும்.



இதன் போசகராக திசைகாட்டி குறூப் தலைவர் திரு.எஸ்.செல்வராஜா (AICIA-FEDERAL CHARTER, AIPFM (UK), MFBA (UK), ASMA (UK), FIBA (UK), MAAT) அவர்களும் இதன் அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

தலைவர் :- திருமதி குமுதினி தர்மராஜா
இணைத்தலைவராக :- திரு.எஸ்.சிவகணேசன்
செயலாளர் :- திருமதி இராஜேஸ்வரி செல்வனாயகம்
:- திரு.முத்துக்குமார் சிவகுமார்
:- திருமதி சுதாகரி கணநாதன்
:- திருமதி சிவஅருட்சோதி விபுலானந்தம்
இணைப்பாளர் :- செல்வி ஆ.சோபனா (வாடிக்கையாளர் தொடர்பாடல் முகாமையாளர் திசைகாட்டி பிறைவேட் லிமிட்டெட்)



திசைகாட்டியின் துன்னாலை இலவச அறநெறிப் பாடசாலை
- இதில் துன்னாலை வடக்கு J/417, துன்னாலை கிழக்கு J/371 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரம் உள்வாங்கப்படுவர்.
- பங்குபெறும் மாணவர்களிற்கு உரிய நிதி ஊக்குவிப்பு
- நவீன புறஜெக்ரர் மூலம் இந்து மதம் போதிப்பு
- பண்ணிசையோடு கூடிய கற்பித்தல்
- பாடசாலை தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடம்.
- நவீன உள்ளகக் கட்டமைப்பைக் கொண்ட ஆய்வுகூடம்

Ms.V.இந்துயா
பொதுமுகாமையாளர்
கௌரவ இயக்குநர்
சபைக்கட்டளைப்படி

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(C-6557)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.